Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி-30 | 14-07-2005 | வியாழக்கிழமை | ஓசை-146



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12149)

# கிழக்கில் அரசியல்துறைப் போராளிகளின் பாதுகாப்பிற்கென மாற்று ஏற்பாடுகள்!

## இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறும் முடிவெதுவுமில்லை -இளந்திரையன்

**அரசாங்க தரப்பும், அரச படைகளும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடப்பதாக இல்லை. அதனால் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகளுக்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அந்தச் சிரமங்களை அடிப்படையாகக் கொண்டு சில மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கொள்கை ரீதியாக எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை என மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் பி.பி.சிக்கு நேற்றிரவு கூறியுள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளில் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள் எனக் கேட்டபோதே இளந்திரையன் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்; இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எங்களுடைய போராளிகள் இப்போதும் அரசியல் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் வேலை செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

ஆனால் அரச படைகளின் அனுமதியுடனோ அல்லது ஆசீர்வாதத்துடனோ எங்களுடைய அரசியல் துறைப் போராளிகள் மேல் தாக்குதல் நடத்தப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## - ஓமந்தையில் வைக்கப்பட்ட-
## சர்ச்சைக்குரிய புத்தர்சிலை இரவோடிரவாக அகற்றல்!

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தை பிள்ளையார் ஆலய வளவினுள் வைக்கப்பட்டு இருந்த புத்தர்சிலை திங்கட்கிழமை இரவோடு இரவாக அகற்றப்பட்டு இருப்பதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட கிளையினர் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கு அறிவித்துள்ளனர்.

இந்த புத்தர்சிலை தொடர்பாக ஆராய்வதற்கு வவுனியா மாவட்ட நீதவான் வன்னிப் பிராந்திய இராணுவத்தளபதி, வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோர் அடங்கிய குழுவினர் திங்கட்கிழமை செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் த.தே.கூட்டமைப்பு சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்குமிடையே வரும் ஞாயிற்றுக்கிழமை சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## -புலிகள் பயணத்திற்குப் பாதுகாப்பு-
## அரசின் சிபார்சில் புலிகள் அதிருப்தி
## பதில் ஓரிருநாட்களில் அனுப்பப்படும்

தமிழீழ விடுதலைப்புலிகள் போராளிகளுக்கு இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிகளினூடாகப் பயணம் செய்வதற்கான பாதுகாப்பு உத்தரவாதம் குறித்து அரசாங்கம் அனுப்பிய கடிதத்திற்கான பதில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பாக இருவாரக்காலக்கெடு விதித்து விடுதலைப்புலிகள் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவூடாக அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தனர்.

இதற்கு அரசாங்கம் காண்காணிப்புக்குழுவினூடாக விடுதலைப்புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

அரசாங்கத்தின் கடிதத்தில் விடுதலைப்புலிகள் விதித்த காலக்கெடுவை நிராகரித்ததுடன் புலிகள் முன்வைத்த ஆலோசனைகளும் நிராகரிக்கப்பட்டிருந்தது. இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியினூடாக விடுதலைப்புலிப் போராளிகள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தனித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சிறிலங்கா படைத்தளங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த தீவிரமுயற்சி!

யாழ்.மாவட்ட இராணுவ, விமானப்படைத் தளங்கள் அடங்கியுள்ள பலாலியினையும்,கடற்படை தளம் அமைந்துள்ள காங்கேசன்துறை மற்றும் காரைநகர் தளங்களினதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

முன்னரங்க காவல் நிலைகளையும் தொடர்பாதுகாப்பு மண் அணைகளையும் மீளப்புதுப்பித்து வரும் படைத்தரப்பு தொடர்ச்சியாக விமானப் படை உலங்குவானூர்திகள் மூலம் ரோந்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

காலை வேளைகளில் வல்வெட்டித்துறை முதல் மாதகல் வரையான கடற்கரைப்பகுதி வேவு மற்றும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் விமானப்படை உலங்குவானூர்திகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

புத்தளம் மருதங்குளிப்பகுதியில் தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை 2-30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கருதப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர் கிரான்பாஸை வசிப்பிடமாகக் கொண்ட கிருஸ்ணன் ரவிச்சந்திரன் என்ற ஒருபிள்ளையின் தந்தை என இனம் காணப்பட்டுள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன. (32)

## தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நல்லுறவு கட்டமைப்பொன்றை உருவாக்க இணக்கம்!



(மட்டக்களப்பு)

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் மட்டக்களப்பில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே உறவினைக் கட்டியெழுப்ப கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் நேற்று மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளந்திரையனுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி மாளிகையை அண்மித்த சுற்றாடல் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம்!

**-விசேட வர்த்தமானி மூலம் வெளியீடு**

(கொழும்பு)

சனாதிபதி மாளிகையை அண்மித்த சுற்றுப் பகுதி அதி உயர்பாதுக்காப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சனாதிபதியினால் இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியின் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஒரு வருடத்திற்கு இது நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. இதன்படி சனாதிபதி மாளிகையின் வடக்கே இந்து சமுத்திரம், மேற்கே சையிற்றா வீதி பொலிஸ் தலைமையகம், கிழக்கு பக்க மாக லோட்டஸ் றோட், மற்றும் தெற்கே பழைய பாராளுமன்ற சுற்று வட்டம ஆகியவற்றிற்குட்பட்ட அரச மற்றும் தனியார் கட்டடங்கள் நிலங்கள் அசையும் அசையாச் சொத்துக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கைக்குண்டு தாக்குதல்கள் ஐந்து சிறிலங்காப் படையினர் காயம்!

திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் நேற்று இனம்தெரியாதோரின் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இத்தாக்குதல்களில் ஐந்து சிறிலங்காப் படையினர் காயமடைந்து திருமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த ஐவரில் இருவரின் நிலை கவலைகிடமான நிலையில் இருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதலாவது தாக்குதல் அதிகாலை ஒரு மணிக்கு மூதூர் பகுதியில் உள்ள பி.என்.பி நலன்புரி நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்து கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் சிறிலங்கா படையினர் இருவரும், நான்கு வயதுச் சிறுவன் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தவறிவிட்டது

கொடிகமத்தைச் சேர்ந்த தம்பு.யசோகா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (822941575v) 12.07.2005 அன்று பளைசோதனைச் சாவடிக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்:- த.யசோகா. (6357)

## நட்டாங்கண்டல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம்

நிகழும் பார்திபவருடம் ஆனிமாதம் 31ஆம் நாள் (15.07.2005) வெள்ளிக்கிழமை காலை 09மணிக்கு கொடியேற்றததுடன் ஆரம்பமாகும். வழமைபோல் மதியம் 12.00 மணிக்கு பூசை நடைபெற்று இரவு அம்பாளும், காத்தவராய சுவாமியும் வீதியுலாவரும் காட்சியும், அதனைத்தொடர்ந்து இரவு தமிழீழத்தில் தலைசிறந்த பாடகர்கள் கலந்து கொள்ளும் கி. S.P ரூபன் இசைக் குழுவினரின் வசந்தராகங்கள் நிகழ்வும் நடைபெறும். அனைவரையும் அழைக்கின்றார்கள்.

ஆலய பரிபாலன
சபையினர்.

(சி-12353)

## Vacancy - Immediate
## Radio Operator

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for an experienced professional for the role of a Radio Operator:

The candidate should have the following **qualifications:**

- Completion of 'A' Level Education
- Excellent computer literacy in MS office applications
- Very good spoken and written English and Tamil
- Working experience with an NGO or an international organization, preferably in an IT / Radio Operator position

**Core responsibilities include:**

- Establish and respond (to) HF / VHF messages
- Monitor all vehicle movements
- Relay messages for other delegations upon demand
- Keeping radio contacts with field trips
- Filing of incoming and outgoing electronic messages

**Employment Conditions:**
According to ICRC's National Scale and employment conditions

Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopy of valid driving licence) to ICRC's office in Kilinochchi **until Friday, 22nd of July 2005.** Qualified candidates will be contacted for interviews.

***INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS***
Subdelegation Kilinochchi
Iraniamadhu Junction
Kilinochchi
Phone: 071 237 56 97 / 071 229 66 80

(சி-12326)

## பத்தாம் ஆண்டின் நினைவலைகள்

மலராக
17-05-1973



விதையாக
14-07-1995

(புலிப்பாய்ச்சல்)

**காஞ்சனா பாலச்சந்திரன்**

தாயகத்தின் விடுதலைக்காய்
தரணியில் உதித்தவளே!
அருந்ததி ஆகியே
ஆயுதம் ஏந்தி - நீ
விடுதலைப் பாதையிலே
வித்தாகிப் போனவளே!
விழவில்லை என்றும் - நீ
விண்ணில் நட்சத்திரமாய்.....
என்றும் உன் வீரச்சுவடுகள்
எம்மனதில் நினைவலையாய்......

முகவரி: இல,60,D:10
உருத்திரபுரம்.

(6402)

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

## Vacancy - Immediate
## Logistics Statistician

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a highly competent, experienced professional for the role of a Statistician in its Logistics Department.

The candidate should have the following **qualifications:**

- Completion of 'A' Level Education. Degree in Social sciences preferred
- Excellent computer literacy in MS office and in database management
- Very good spoken and written English and Tamil
- Working experience with an NGO or an international organization
- Professional qualification in procurement or logistics an asset

**Core responsibilities include**

- Ensures accurate and complete documentation and reporting of all procurement and warehousing operations
- Drafts the logistics notifications and correspondence both in English and Tamil
- Ensures complete procurement filing
- Supervises the warehouse manager in day-to-day stock management and recurring inventory exercices
- Replaces the Logistics assistant in his absence

**Employment Conditions:**
According to ICRC's National Scale and employment conditions

Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopy of valid driving licence) to ICRC's office in Kilinochchi until **Friday, 22nd of July 2005.** Qualified candidates will be contacted for interviews.

***INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS***
Subdelegation Kilinochchi
Iraniamadhu Junction
Kilinochchi
Phone: 071 237 56 97 / 071 229 66 80

(சி-12326)

## சாவு அறிவித்தல்

### சுப்பிரமணியம் கோபாலபிள்ளை
(முன்னாள் காங்கேசன்துறை பிரபல வர்த்தகர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது இல 57 சுவாமியார் வீதியில் வசிக்கும் சுப்பிரமணியம் கோபாலபிள்ளை (முன்னாள் காங்கேசன்துறை பிரபல வர்த்தகர்) 09.07.2005 சனிக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி அடைக்கலம்மா கோபாலபிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான, கந்தையா,குமாரசாமி, பசுபதி,பொன்னம்பலம், தனுஷ்கோடி (கனடா), சிதம்பரம்மா ஆகியோரின் சகோதரனும், தவமலர் (லண்டன்), சோதிநாதன் (கனடா), தங்கமலர் (ஜேர்மன்), கிருஸ்டி ஆனந்தராஜா (உதவி தபாலதிபர், கொட்டாஞ்சேனை சமாதான நீதவான்), சண்முகதாசன் (தாஸ்) (பிரான்ஸ்), மரியஸ்ரெலா (ஒல்லாந்து), தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், விஜயரத்தினம், ரோகினி, அந்தோனிப்பிள்ளை, சந்திரமதி, கிருஸ்ணவேணி, செல்வராசா, பாமா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சுவாமியார் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு இன்று மாலை 4.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-
கோ.கி.ஆனந்தராஜா (மகன்)

(சி-12327)

## கண்ணீர் அஞ்சலி



### செல்லத்துரை பிரான்சிஸ் பற்றிக்
**(கொட்டடி, யாழ்ப்பாணம்)**
**இறப்பு:: 11. 07. 2004**

நீதியையும் நேர்மையையும் நிலைநாட்ட
தமிழீழ சட்டக் கல்லூரியிலும்
நீதிநிர்வாகத் துறையிலும்
சேவைகள் நீர் புரிந்தாய் ஐயா!
பற்றுள்ள பாதுகாவலனாய்,
காவலாளியாய் கடமையை
கண்ணியமென்று கொண்ட
பற்றிக் ஐயா!
உம் இழப்பின்துயரில் நாமும்
நனைகின்றோம்.

பணியாளர்கள்,
நீதி நிர்வாகத்துறை.

(சி-12354)

## இன்று வயல் விழா

(அலுவலக செய்தியாளர்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிதியுதவியுடன் கிளிநொச்சி விவசாய திணைக் களத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்ட பயறு, கௌப்பிவிதை உற்பத்தி வயல் விழா இன்று காலை 10.00 மணிக்கு அக்கராயன் கண்ணகை புரத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் அனைத்து விவசாயி களையும் கலந்து பயன்பெறும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப் பாளர் சீ. ஆனந்தராசா வேண்டி யுள்ளார். (சோ,லோ,ச)

## நேர்முகத்தேர்வு

தேசிய கல்வி நிறுவகம் நடத்தும் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சிநெறிக்கு முல்லைத்தீவுப் பிரதேச நிலை யத்தினூடாக விண்ணப் பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17-07-2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் க. சரவணபவன் தெரியத் தருகின்றார்.

மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தெரிவிற்குரிய கடிதங்கள் தேசியக் கல்வி நிறுவகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டது. விண்ணப் பித்தவர்களுக்கு அக்கடிதம் கிடைக்கா விடினும் நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்படு கிறார்கள். தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், பட்ட தாரிச் சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், சேவைச் சான்றிதழ் என்பன நேர்முகத் தேர்வின்போது காண்பிக்க வேண்டுமென்றும் கேட் கப்படுகின்றது.

## வழங்கல்கட்டளை

சுனாமியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிவாரணத்தின் 33ஆம் 35ஆம் புள்ளிகளுக்கான வழங்கற் கட்டளைகள் இன்று முதல் யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

ப.நோ.கூ.சங்கங்கள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல் லிணக்க செயலகத்தில் அவற்றை உடனடியாகப் பெற்று 18.07.2005ஆம் திகதிக்கு முன்னர் உலக உணவுத் திட்ட நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்று உடனடியாக விநியோகத்தினை ஆரம்பித்து 25.07.2005ஆம் திகதியுடன் மேற்படி புள்ளிகளுக் குரிய உணவு விநியோகத்தினை நிறுத்துமாறும் உரிய பயனாளி களின் மேற்படி புள்ளிகளுக்குரிய நிவாரணத்தை காலம் தாழ்த்தாது 25.07.2005ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். மாவட்ட உதவித்திட்டப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.

## விசேடசெயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு ஊடக வியலாளர்களுக்கான கண் பராமரிப்புப் பற்றிய விசேட செயல மர்வு ஒன்று நடை பெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு இச்செயலமர்வு யாழ்நகரில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் குடாநாட்டு ஊடக வியலாளர்கள் தம் கண்ணினைப் பராமரிப்புச்செய்து அதன் திற னைப்பேண வேண்டியதன் அவ சியம் குறித்து விளக்க மளிக் கப்படவுள்ளது.

முழுநாள் செயலமர்வாக நடை பெறவுள்ள இச்செயலமர் வுக்கான ஏற்பாட்டினை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் மேற்கொண்டுள்ளார். (33)

## லெபனானில் கார்க்குண்டுத்தாக்குதல் துணைப்பிரதமர் காயங்களுடன் தப்பினார்

(பெய்ரூட்)

லெபனான் துணைப் பிரதமர் மீது கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் இதில் காயங்களுடன் உயிர் தப்பினார்.

லெபனானில் கடந்த பெப்ரவரி மாதம் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி காரில் செல்லும்போது வெடிகுண்டு வீசிக் கொல்லப் பட்டார். அன்றைய ஆளும் கட்சிதான் இதறகுக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் புகார் கூறிவந்தன. சிரியாவுக்கு ஆதரவாக லெபனான் அரசு செயற்பட்டு வந்தது. இந்த நிலையில் சமீபத்தில் லெபனானில் நடந்த தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து ஆட்சியில் இருந்து அமைச்சர்கள் இராஜினாமா செய்து வருகிற ார்கள். துணைப் பிரதமர் எலியாஸ் முர் என்பவரும் பதவி விலகுகிறார்.

இந்த நிலையில் சிரியாவுக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் மீது புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் தாக்குதல் நடத்தத் தொடங்கி யிருக்கிறார்கள்.

பதவி விலகிச் செல்லும் துணைப் பிரதமர் எலியாஸ் முர் மீது கார்க் குண்டுத் தாக்குதல் நடந்தது. பெய்ரூட் நகரில் அவர் காரில் செல்லும்போது அவரது கார் மீது வெடி குண்டு நிரப்பப்பட்ட கார் மோதியது. இதில் அவர் பாடுகாயமடைந்தார்.

## பாகிஸ்தானில் கோர ரயில்விபத்து
## நூற்றுக்கு மேற்பட்டோர் பலி; பலர் படுகாயம்




(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானிலுள்ள சிந்து மாகாணத்தின் சர்கத் ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை மூன்று ரயில் வண்டிகள் மோதியதன் கார ணமாக ஏற்பட்ட விபத்தில் 200 இற்கும் அதிக மானோர் உயிரிழந்ததாகவும், ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லாகூர் நகரில் இருந்து வந்துகொண் டிருந்த ஒரு ரயில் வண்டி மற்றுமொரு ரயில் வண்டியின் மீது மோதிய அதேசமயம் மூன்றா வது ரயில் வண்டி ஒன்று ஏற்கனவே விபத் துக்குள்ளாகி கவிழ்ந்த பெட்டிகளில் மோதிய தன் காரணமாக இக்கோர விபத்து ஏற்பட்டுள் ளது. இச்சம்பவத்தில் நூற்றிற்கும் அதிக மானவர்கள் இறந்திருக்கக் கூடுமென்று பாகிஸ்தான் தொலைக்காட்சி செய்தி தெரி விக்கின்றது.

இருப்பினும் இதுவரை 120 பேரின் உடல் கள் மீட்கப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் பொலி சார் தெரிவித்துள்ளனர். எனினும் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப், பிரதமர் சௌக்கத் அஸீஸ் விபத்துக்குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளனர்.





லெபனானில் குண்டுத்தாக்குதலில் சேத மடைந்த காரை இராணுவ வீரர் ஒருவர் ஆய்வு செய்கிறார்.

## ஈராக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டே அமெரிக்கப் படையினர் வாபஸ் பெறப்படும்

-பென்டகன் தகவல்

(வோஷிங்டன்)

ஈராக்கில் தேவைப்படும் வரை அமெரிக்க இராணுவம் இருக்கும்' என்று அமெரிக்க இராணுவ தலைமையகம் கூறி யுள்ளது.

ஈராக்கில் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் அமெரிக்க இராணு வத்தினர் முகாமிட்டுள்ளனர். பிரிட்டன் உட்பட பல்வேறு நட்பு நாடுகளின் படையினரும், பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கப்படைகளுக்கு எதிராக தீவிரவாதிகள் கடும் தாக்குதல் நடத்துகின்றனர். படையினரின் உயிரிழப்பு எண் ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டிருக்கிறது. இத னால் 2006 ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தின் ஒரு பகுதியை வாபஸ் பெற அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறிவரு கின்றனர்.

ஆனால், அமெரிக்க இராணுவ தலைமையகமான பென் டகன் இதை மறுத்துள்ளது. பிரிட்டனில் வெளியாகும் 'மெயில்' பத்திரிகைக்கு பென்டகன் தகவல் தொடர்பாளர் பிரைன் ஒயிட்மேன் அளித்த பேட்டியில், ஈராக்கில் இருந்து படையை வாபஸ் பெறுவது தொடர்பாக இதுவரை உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. ஈராக்கின் பாதுகாப்ப அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்தே படை வாபஸ் அமையும் என்று தெரிவித்தார்.

## ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர அந்தஸ்து ஜி-4 நாடுகளின் முயற்சிக்கு அமெரிக்கா பகிரங்க எதிர்ப்பு

ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடு அந்தஸ்து கோரும் ஜி-4 நாடுகளின் முயற்சியை அமெரிக்கா பகிரங்கமாக எதிர்த்துள்ளது.

தீர்மான வரைபை எதிர்த்துள்ள அமெரிக்கா ஐ.நா பேரவையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டால் அதற்கெதிராக வாக்களிக்குமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண் டுள்ளது. தீர்மான வரைபின் மீதான வாக்கெடுப்பை நடத்த வேண்டாமென்று இந்தியா, பிரேசில், யப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நான்கு நாடுகள் குழுவிடம் அமெரிக்கா கூறியுள்ளது.

ஜி-4 நாடுகளின் தீர்மான வரைபிற்கு நாடுகளிடையே ஆதரவில்லையென்றும் வாக்கெடுப்பால் எந்தவிதப் பயனுமில்லையென்றும், ஐ.நா சீர்திருத்தம் தொடர்பான அமெரிக்க வெளியுறவு ஆலோசகர் ஐ.நா.பேரவையில் தெரிவித்தார்.

இந்த அறிக்கை பற்றி கருத்து வெளியிட்ட ஐ.நாவுக் கான இந்தியத்தூதுவர் நிருபம்சென் இது ஜனநாய நடவடிக்கையென்றும், பல்வேறு நாடுகளின் கருத்துக்கள் வெவ்வேறு விதமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார். தகுந்த சமயத்தில் தீர்மானவரைபை வாக்கெடுப்பிற்கு கொண்டுவர ஜி-4 நாடுகள் திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## லண்டன் குண்டுவெடிப்பு துண்டிக்கப்பட்ட தலைமீட்பு

(லண்டன்)

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கடந்த வியாழக் கிழமை நடந்த தொடர்குண்டு வெடிப்பின்போது பலர் பலி யானார்கள். மாடிப் பேருந்தில் பயணம் செய்ததற்கொலை படை தீவிரவாதி, தான் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், குண்டு வெடிப்பு நடந்த அந்தப் பகுதியில் கிடந்த துண்டிக் கப்பட்ட தலை ஒன்றைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். அது மனித வெடிகுண்டின் தலையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது.



பாக்தாத்தில் இராணுவ ரோந்து அணிமீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர். 25 பேர் காயமடைந்தனர். தனது வீட்டிற்கு அண்மையில் இடம்பெற்ற இத்தாக்கு தலினால் ஈராக்கியப் பெண்மணி ஒருவர் கதறி அழு கின்றார்.

## லண்டன் நகரில் தாக்குதல் நடத்தியவர்கள் இரகசிய புகைப்படக்கருவியில் பதிவானது

லண்டன் நகர் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திய வர்கள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தவில்லை என்று முதலில் பொலிசார் தெரிவித்தனர். ஆனால் தீவிரவாதிகள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியிருப்பதாகப் பொலிசார் இப்போது தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய நான்கு தீவிரவாதிகளும் பலியாகி விட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகள் லண்டன் நகருக்கு ஊடுருவியதை ரகசியப் புகைப்படக்கருவி பதிவு செய்துள்ளது. குண்டுவெடிப்புக்கு முன் அந்த நான்கு பேரும் லண்டன் நகரில் சந்தேகப்படும்படி அங்கு மிங்கும் நடமாடியதாகவும், இதற்கு முன் அவர்களை அங்கு பார்த்ததே இல்லை என்றும், ரயில்நிலைய ஊழியர் களும், வேறு சிலரும் தெரிவித்தனர்.

தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் பெயர் ஹாசிஷ்உசேன் (வயது-19) இன்னொருவர் பெயர் செஷாகத் தன்வீர். பாகிஸ்தானைச் சேர்ந்த இவர்கள் லண்டனில் படித்தவர்கள் எனவும், லீட்ஸ் நகரில் தங்கியிருந்த இவர்கள் வெடிகுண்டு நிரப்பிய காரில் லண்டனுக்கு வந்ததா கவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய இரண்டு தீவிரவாதிகளின் பெயர் விபரம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெடிகுண்டு ஏற்றி வந்த காரையும் லண்டன் பொலிசார் இப்போது கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் லண்டனில் மீண்டும் குண்டுவெடிக்கும் என்று பொலிசாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து முக்கிய இடங்களுக்கு இதுவரை இல்லாத அளவுக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## லண்டன்நகர் தொடர் குண்டுவெடிப்பு ஐந்து வீடுகளில் அதிரடிச்சோதனை



(லண்டன்)

லண்டனில் பாதாள ரயில் நிலையங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது தொடர்பாக, ஐந்து வீடுகளில் பொலிசார் அதிரடிச் சோதனை நடத்தியுள்ளனர்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில், மூன்று பாதாள ரயில் நிலையங்களில் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். மாடி பஸ் ஒன்றும் தகர்க்கப்பட்டது. இதில் நூறுபேர் பலியாயினர். அல்-ஹைதா தீவிரவாதிகள் தான் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. தீவிரவாதிகளை சுற்றிவளைக்கப் பிரிட்டனின் பல்வேறு படையினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். முதற் கட்டமாக 30 தீவிரவாதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு முன் தீவிரவாதிகள் தங்கியிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஐந்து வீடுகளில் பொலிசார் நேற்று முன்தினம் அதிரடி சோதனை நடத்தினர். பிரிட்டன் வடக்குப் பகுதியில் உள்ள மேற்கு யார்க்ஷயரில் சோதனை நடந்தது. இது குறித்து மேற்கு யார்க்ஷயர் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறு கையில், "உள்ளூர் அதிகாரிகள், உளவு அதிகாரிகள் உட்பட பலர் ஐந்து வீடுகளில் சோதனை நடத்தினர். அதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தீவிரவாதத் தடுப்புத் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். இதேவேளை சோத னையில் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை எனத்தெரி விக்கப்படுகிறது.

இதற்கிடையில் வெடிகுண்டு தாக்குதலில் பலியான வர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. அதில் சூசன் லெவி (53) என்பவர் பலியானதாக அதிகாரபூர் வமாக முதல் பெயர் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.



பாக்தாத்தில் ஈராக்கிய, அமெரிக்க இராணு வத்தினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஈராக் கில் அல்-ஹைதாவின் நடவடிக்கைகளிற்குப் பொறுப் பான முக்கிய தலைவர்களில் ஒருவரான அபுமுசாப் அல்-அல்சர்குவி கைது செய்யப்பட்டதை ஒரு அமெரிக்க இராணுவத்தளபதி விபரிக்கிறார்.

# பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்துவதில் தான் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவது தங்கியுள்ளது

## திருமலை செயலக மாநாட்டு மண்டபத் திறப்பு விழாவில் இரா. சம்பந்தன்

(திருமலை)

**கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளைக் கட்டுவது, பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது ஆகியவற்றை மேற்கொள்வதற்கே பொதுக் கட்டமைப்பு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அமைப்பை முழுமையாகச் செயற்படவைப்பதில்தான் நாட்டின் நிரந்தர சமாதானம் ஏற்படுவது தங்கியுள்ளது என்று திருமலை மாவட்ட பாராளுமன்று உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.**

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாநாட்டு மண்டபத்தின் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொணடு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்:-

பொதுக் கட்டமைப்பிற்கு எதிரான சக்திகள் கட்டமைப்பு அமுல் நடத்துவதை நிறுத்துவதற்குத் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர். அதன் ஒரு கட்டமாக முஸ்லிம் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி பொதுக் கட்டமைப்பை நிறுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. " என்று தெரிவித்த இரா. சம்பந்தன்" முஸ்லிம் அரசியல் தலைமைகள் பொதுக் கட்டமைப்பை எதிர்க்கவில்லை:- பொதுக் கட்டமைப்பில் கூடுதலான அந்தஸ்து தரப்பட வேண்டும் என்று தான் கேட்கின்றார்கள்.

"முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்கப்படுவதை மறுக்கக் கூடாது என்பதில் நாம் இறுக்கமாக உள்ளோம். முஸ்லிம் மக்கள் பூரண திருப்தி அடைய வேண்டும் அதுவரை தமிழ் மக்களும் திருப்தி அடைய முடியாது"

"முஸ்லிம் மக்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன் நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒருமித்த கருத்தை முன்வையுங்கள் உங்களுக்கு நீதி கிடைக்கக் கூடிய வகையில் நாம் ஆதரவு வழங்குவோம். எல்லோரும் நன்மை பெறக் கூடிய வகையில் குழப்பமடையாமல் நாம் அனைவரும் செயலாற்ற வேண்டும்"

1957 இல் கைச்சாத்திடப்பட்ட பண்டார நாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் நாட்டில் நிரந்தர சமாதானம் எப்போதோ ஏற்பட்டிருக்கும். அப் பெறுமதியான ஒப்பந்தத்தை எதிர்த்து ஜெயவர்த்தனா பாதயாத்திரையை அன்று நடத்தினார். பின்னர் ஒப்பந்தம் கிளித் தெறியப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் வாழ்விடங்களுக்கு திரும்பிப் போக முடியாமல் முகாம்களில் துன்பப்படுகின்றார்கள் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வாழ் விடங்களுக்குப் திரும்பிச் செல்லல் வேண்டும்:- அவர்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்பட வேண்டும். தற்போது நிலவரம் தொடர்வதை அனுமதிக்க முடியாது. யுத்தம் நாட்டில் மீண்டும் ஏற்படாதிருக்க வேண்டுமானால் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான, கௌரவமான தீர்வு காணப்பட வேண்டும் என்று இரா. சம்பந்தன் கூறினார்.

## தட்டுவன்கொட்டிக் குடியிருப்பில் முன்பள்ளி அமைக்க ஏற்பாடு

தட்டுவன்கொட்டிக் குடியிருப்பில் புதிதாக முன்பள்ளியை அமைப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.


இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட தட்டுவன் கொட்டிக் கிராமத்தில் குடியிருப்புக்கள் அமைத்து அண்மைக்காலத்தில் மீள் குடியமர்விற்குட்படுத்தப்பட்ட நிலையில் அங்கு முன்பு முன்பள்ளியில் கற்றுவந்த சிறார்களின் கற்றல் செயற்பாட்டினை மீள ஆரம்பிக்கும் முகமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி முன்பள்ளியை அங்கு அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

தொடர்ந்து எதிர்வரும் திங்கள் தொடக்கம் இங்கு முன்பள்ளியை இயக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு இம் முன்பள்ளி சிறார்களுக்கான போசாக்கு உணவு வழங்கவும் கற்றல் உபகரணங்களை வழங்கவும் இவர்கள் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## வருடாந்த பொதுக்கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையின் 2005 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டம் எதிர் வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் தலைவர் இ.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது. (சோ)



கிளிநாச்சி மாவட்டத்தில் தற்கொலை முயற்சிகள் அதிகரித்து வருவதன் காரணமாக மேற்படி விடயம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. வைத்திய கலாநிதி யூடி ரமேஸ்குமார் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- சோதி)

## கடற்படையினரால் மீனவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக மனித உரிமைகள் செயலகத்தில் முறைப்பாடு

மீனவர்கள் ஐவருக்கு கறுக்காய் தீவு கடற்பகுதியில் வைத்து சிறிலங்கா கடற்படையினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது கடந்த மூன்றாம் திகதி பூநகரி நல்லூர் பகுதியைச் சேர்ந்த ப.தேவன், சி.நாதன், ந.சங்கர், க.உதயன், சி.அப்பன் ஆகிய ஐந்து மீனவர்களும் தொழிலுக்காகத் கறுக்காய்தீவுப் பகுதிக்குச் சென்று மீன்பிடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளை காலை 7.15 மணயளவில் தமது படகினை நோக்கி வேகமாக வந்த மூன்று அதிவேகப் படகுகளிலிருந்தவர்கள் தம்மிடம் அனுமதி அட்டையை காட்டுமாறு கேட்டதாகவும், தம்மிடம் இல்லாததால் சாவகச்சேரி கடற்படை முகாமில் அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கூறியதோடு அடுத்த முறை கடற்படையின் அனுமதியின்றி தொழிலுக்கு வர வேண்டாம் எனவும் அச்சுறுத்தியதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர்.


அத்தோடு அப் படகுகளில் வந்தவர்களில் ஒருவர் மட்டுமே தம்மோடு பேசியதாகவும் அவர்கள் சிறிலங்கா கடற்படையினரே என்பதை தம்மால் இனங்காண முடிந்ததாகவும், அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச)

## முன்பள்ளிச் சிறார்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருடன் த.பு.க. ஆலோசனை


தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டுப் பிரிவினரும், இணைந்து முன்பள்ளிச் சிறார்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருடன் ஆலோசனை நடாத்தி வருகின்றனர்.

இவ்வீட்டுத் தரிசிப்பின் முதற்கட்டமாக கடந்த ஒன்பதாம் திகதி சாந்தபுரத்தில் அமைந்துள்ள சாந்தன் முன்பள்ளிச் சிறார்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருடன் கலந்தாலோசித்துள்ளனர். இவ் ஆலோசனையில் முன்பள்ளி சிறார்களின் கற்றல் விருத்தி, மற்றும் முன்பள்ளி அபிவிருத்தியில் பெற்றோர்களின் பங்களிப்பு போன்ற விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டன. கடந்த ஒன்பதாம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மூன்று பேர் கொண்ட ஐந்து குழுக்களாக தரிசிப்பிற்குச் சென்ற இக் குழுக்கள் அப்பகுதியில் உள்ள 119 முன்பள்ளி சிறார்களின் வீடுகளை தரிசித்துள்ளனர்.

இதேவேளை பத்தாம் திகதி சாந்தன் முன்பள்ளியில் பெற்றோர்களுக்கான கலந்துரையாடலை நடாத்திய இக்குழுவினர் அம் முன்பள்ளிக்கான புதிய நிர்வாகத்தினையும் தெரிவு செய்ததோடு முன்பள்ளிகளில் இணையாத சிறார்களை இணைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர். இந்நிகழ்வுகளில் கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் கிளிநொச்சி கிழக்கு அபிவிருத்தி நிறுவன தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)



கிளிநொச்சி திருநகர் வீதியின் பாலம் ஒன்றின் மையப் பகுதியில் கிரவல் கொட்டப்பட்டுள்ளமையின் காரணமாக அவ் வீதியூடாக போக்குவரத்து மேற்கொள்ளும் வாகன ஓட்டுனர்கள் முதல் பாதசாரிகள் வரை பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்வதனை படத்தில் காணலாம். (படம்:- சோதி)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமைச் செயலகத்தினால் கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு புதிய ...ன்பிக்கப் ஒன்றினை கடந்த வாரம் வழங்கியுள்ளது. மேற்படி வாகனம் ...ச்சி செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வந்துசேர்ந்துள்ளதனை படத்தில் ... (படம் சோதி

## மூவர் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பிய ஈழத் தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் இதில் அடங்குவர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாடு திரும்பிய இவர்கள் பொலிசாரால் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையிலேயே தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (18)

## சேது சமுத்திரத் திட்டத்தை கைவிடுமாறு வடக்கு கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை

(மன்னார்)

சேது சமுத்திரத் திட்டத்தை கைவிடுமாறு வடக்கு கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவிடம் தலை மன்னார் பேசாலை, வங்காலை, தாழ்வுப்பாடு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் மன்னாருக்கு விஜயம் செய்த ஆளுநரிடம் இத் திட்டத்தினால் எமது மீனவ சமூகம் பெரும்பாதிப்பை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் இதனால் பவளப் பாறைகளின் வளம் அகற்றப்படும் எனவும் எண்ணெய் கசிவு ஏற்பட்டு மீன்வளம் குறையும் எனவும் இம் மக்கள் ஆளுநரிடம் எடுத்துக் கூறி இத் திட்டத்தைக் கைவிடுமாறு கோரியுள்ளனர். (18)

# கொழும்புத்துறை கடற்கரை பிரதேச உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுக

## தும்புத் தொழிலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். கொழும்புத்துறை கடற்கரையில் இருக்கின்ற இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு அப் பகுதி தும்புத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.**

கொழும்புத்துறை கடற்கரையை அண்டி வாழும் ஏராளமானோர் தேங்காய் உரி மட்டைகளைக் கடல் நீரில் ஊறவிட்டு அதனை தும்பாக அடித்தெடுத்து தும்பு மூலமான உற்பத்திப் பொருட்களை செய்து விற்பனைசெய்து வாழ்க்கை நடத்தும் தும்புக் கைத்தொழிலாளர்களாவர்.

எனினும் கொழும்புத்துறை கடற்கரைப் பிரதேசமானது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாகவுள்ளதால் இங்கு தும்பு அடிப்பதற்காக தேங்காய் உரிமட்டைகளை ஊறவிட கடற்கரைக்குச் செல்வோர் மீது படையினர் பலத்த கெடுபிடிகளை புரிந்து வருகின்றனர்.

இதனால் தமது தும்பு கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ள மையைக் காரணம் காட்டியே அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அமைப்புக்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன. (33)

# தச்சன்தோப்பு வீதியை புனரமைக்கக் கோரிக்கை

கண்டி வீதியையும், கேரதீவு வீதியையும் இணைக்கும் தச்சன் தோப்பு வீதியை வருகின்ற மழைகாலத்துக்கு முன்னர் புனரமைக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த முறை பெய்த அடைமழை காரணமாக இவ்வீதியில் மழைநீர் தேங்கியதால் இவ் வீதி கடுமையாகப் பாதிக்கப்பட்டு சிதைந்து போய் விட்டதால் இவ் வீதியை உடனடியாக புனரமைக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

# கச்சாய் மிருசுவில் பாடசாலைகளுக்கு கட்டட வசதிகள் செய்துதர கோரிக்கை

(தென்மராட்சி)

கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை,மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றிற்குக் கட்டட வசதிகள் செய்துதர கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற விதத்தில் இவ்விரு பாடசாலைகளிலும் கட்டட வசதிகளோ தளபாட வசதிகளோ இல்லை எனவும் இவற்றிற்குப் பெரும் பற்றாக்குறை நிலவி வருவதால் இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கையினை எடுக்கும்படியும் பாடசாலை சமூகம் கல்வித் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (28)

# இரவினில் மீன்பிடி தொழில்செய்ய அனுமதிக்க வேண்டும்

## -கைதடி, நாவற்குழி மீனவர் கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடி நாவற்குழி தெற்கு மீனவர்கள் தம்மை இரவினில் மீன் பிடித் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோயிலாக்கண்டி முதல் அரியாலைவரை கடலுக்குள் அமைக்கப்பட்டுள்ள முட்கம்பிவேலிகளை அகற்றி சுதந்திரமான முறையில் தமது தொழிலை மேற்கொள்ள நடவடிக்கையின்ன எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் பல்வேறு தரப்புக்களிடம் கோரிக்கையினை விடுத்திருப்பதாக கைதடி நாவற்குழி தெற்கு கடற்றொழிலாளர் சமாசம் தெரிவித்துள்ளது(28)

# கசிப்பு காய்ச்சிய பெண்மணிக்கு யாழ்.நீதிமன்று 80 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வழக்கு ஒன்றில் பெண் மணி ஒருவருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த அபராதம் நேற்று முன்தினம் யாழ. மாவட்ட நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது.

கொக்குவிலைச் சேர்ந்த பிரஸ்தாபப் பெண்மணி கசிப்பு உற்பத்தி செய்தமை, அதனை விற்பனை செய்தமை உற்பத்தி மூலப் பொருட்கள் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டில் கடந்த மாதம் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீதான விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றபோது மேற் குறித்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ-த விக்கினராஜா இருவருக்கு 80ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதில் 60 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாகவும், 20 ஆயிரம் ரூபாவைத் தர்மப் பணமாகவும் அறவிடுமாறும் உத்தரவிட்டார். (33)

# லேப். சீலன் ,ஆனந் ஆகியோரின் 22 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுக்கு ஏற்பாடு

(தென்மராட்சி)

1983 ஆம் ஆண்டு வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்.சீலன், லெப். செல்லக்கிளி, வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 22 ஆம் ஆண்டு நினைவு தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க தென்மராட்சியில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வரும் வெள்ளிக்கிழமை லெப். சீலன், ஆனந் ஆகியோர் வீரச்சாவை தழுவிக் கொண்ட இடமான அல்லாரை சீலன் நினைவுப்பூங்கா வளாகத்தில் காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெற இருக்கிறது.

அனைத்து அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும் பொது மக்களையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் படி அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளது. (28)

# மீசாலை சந்தி - நுணாவில்வரை மின்விளக்கு பொருத்தப்பட்டன

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபையால் நகர சபைக்கு உட்பட்ட பகுதிக்குள் அமைந்துள்ள பிரதான சாலையில் பொதுமக்களின் நன்மை கருதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இருப்பதாக நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

மீசாலைச் சந்தியில் இருந்து நுணாவில் வரை உள்ள பகுதிகளுக்கே மின்விளக்குகள் பொருத்தப்பட்டு இருப்பதாகவும் மற்றும் நகரத்திற்கான குடிநீர் விநியோகம் வரும் பத்து நாட்களுக்குள் நடைபெற இருப்பதாகவும் அதற்கான பணிகள் பூர்த்தி அடைந்து விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (28)

# இரவுவேளையில் சிறிலங்காப்படையினர் தீவிர பயிற்சி இராணுவத் தளபாடங்கள் முகமாலைக்கு நகர்வு!

(தென்மராட்சி)

நாகர்கோவில், கிளாலி, எழுதுமட்டுவாள் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படைகள் இரவில் தீவிரபயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதால் மிருசுவில் வரையான கிராமங்கள் குண்டுச் சத்தங்களால் அதிர்ந்து வருகின்றன.

இடைவிடாத துப்பாக்கிச் சத்தங்களுடன் எறிகணைகளையும், டாங்கிகள் உட்பட கனரக ஆயுதங்கள் மூலமும் பயிற்சிகள் இடம் பெற்று வருவதால் குண்டுச்சத்தங்கள் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்து வருகின்றது.

இதேவேளை யாழ்.குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்து முகமாலை நோக்கி கனரக துருப்புக்காவிகள், கவசவாகனங்களை படையினர் நகர்த்தி வருவதாகத் தெரியவருகிறது. (28)

# கல்லாறு வீதியில் பயணிகள் அசௌகரியம்

பரந்தன்- முல்லை வீதியில் சுண்டிக்குளம் சந்தியிலிருந்து கல்லாறுக்குச் செல்லும் சுமார் ஐந்து கிலோமீற்றர் நீளமான வீதியால் ஈருருளி, உந்துருளியில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

வீதிக்கு கிரவல் பரவப்பட்டுள்ளபோதும் அதற்கு தண்ணீர் ஊற்றி றோலர் மூலம் மிதிக்காததால் ஈருருளி, உந்துருளிகள் பயணிக்க முடியாதளவு சறுக்குவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.



"மல்டிலக்" நிறுவனத்தினரால் நிறங்களின் சோலை (வர்ண வங்கி) அறிமுகவிழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு கரடிப் போக்கு சந்தி அலுகிலுள்ள பாண்டியன் வாணிபத்தில் நடைபெற்றது.

பாண்டியன் வாணிபத்தினருக்கும் "மல்டிலக்" நிறுவனத்திற்கும் இடையில் வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந் நிகழ்வில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வழங்கவென ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வர்ண வகைகளை வணிக ஒன்றியத்தலைவர் வெற்றியரசனிடம் "மல்டிலக்" நிறு வனத்தின் நிர்வாக முகாமையாளர், முகமட் மிஸ்வர் மகீம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

(படம் : செல்வா)

# நாவற்குழி இந்து ஆலயங்களில் வழிபாடு நடத்த அனுமதிக்க வேண்டும்

## ஆலய பரிபாலனசபைகள் கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடி நாவற்குழிக்கு உட்பட்ட மறவன்புலோ பிரதேசத்திலுள்ள பிரசித்தம் பெற்ற ஆலயங்களில் தொடர்ச்சியாக பூசைகளை மேற்கொள்ள படையினர் விதித்துள்ள தடைகளை உடனடியாக விலக்க வேண்டுமென ஆலய பரிபாலன சபைகள் பல்வேறு தரப்புக்களிடம் கோரிக்கைகள் விடுத்துள்ளன.

வண்ணக்குள பிள்ளையார் ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலயம், பிலாக்காட்டு வைரவர் கோயில், வடக்கு பிள்ளையார் ஆலயம் என்பனவற்றையே, அரச படைகள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்துள்ளன. இதனால் பிரசித்தம் பெற்ற இவ்வாலயங்களில் பூசைகள் இன்றி இருப்பதோடு இவ்வாலய சிற்பங்கள் பாதிக்கப்பட்டு இருப் பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

சிங்கள அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளுடன் எப்படி அரசியல் நடத்துவது, என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் புலிகளுடன் அரசியலை நடத்த முடியாது : இப்பிரச்சினையே தற்போதைய அரசியல் காய்நகர்த்தலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தற்போதைய சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை பார்க்கும் பொழுது இப்பிரச்சினைக்கு நாங்கள் விடைகாண வேண்டி உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

இப்பொழுது ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் ஆயுதம் தாங்கிய தீவிரவாத இயக்கமான விடுதலைப் புலிகளுடன் எந்தப்பேச்சு வார்த்தைகளையும் நடத்தவேண்டாம் என அரசாங்கத்திற்கு பல நெருக்கடிகளை கொடுத்துள்ளன.

சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக மூன்று யோசனைகளை ஜே.வி.பியினர் முன் வைத்துள்ளனர். தீவிரவாத விடுதலைப்பு லிகளுடன் எந்த ஒரு அரசியல்



அரசாங்கங்களால் முடியவில்லை. நாட்டின் அழிவையே சந்தித்தார்கள். இப்பொழுது நாட்டின் சமாதான ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து யுத்தம் செய்யத் தயாராகுங்கள் என ஜே.வி.பி யினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் கோருகின்றனர்.அப்படி அரசாங்கம் சமாதான ஒப்பந்தத்தை மீறி யுத்தம்செய்வதற்கு ஆயத்தமானால் தமிழர்களுக்கு என தனி நாடு சர்வதேசங்களால் அங்கீகரிக்கப்படும். இது நியாமானதென சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொள்ளும். இதைத் தடுக்க இவர்களுக்குளந்த சக்தியும் இல்லை. இது சிங்கள இன மக்களுக்கு சிங்களவர்களால் கொடுக்கப்படும் சாபக்கேடாகும். இதை புத்தி உள்ள சிங்களவர்கள் சிந்திப்பது மிக அவசியமாகும்.

விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கைன கைவிட்டு ஆயுதங்களையும் கீழே வைக்கும் வரை பேச்சுவார்த்தைக ளையோ, அல்லது சமாதான ஒப்பந்தங்க ளையோ செய்யக்கூடாது என ஜே.வி.பி யினர்கள் நிபந்தனைகளை விதிக்கின்றனர். இதனைக் கதை வடிவில் செயற்படுத்தலாம். ஆனால் செயலில் இது செல்லு படியாகாது. நாள் முழுவதும் இவ்வாறு கூறிக்கொண்டு தொண்டை கிழிய கத்தினாலும் விடுதலைப்புலிகள் இவற்றைத் தூசுக்கும் கணக் கெடுக்கமாட்டார் கள் .நாட்டில் தனி நாடு கேட்டு ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டிருக்கும் ஒரு பலம் வாய்ந்த இயக்கமான விடுதலைப்புலிகள் இதனைக் கைவிட்டு ஆயுதங்களை கீழே வையுங்கள் என்ற சிங்களப் பேரினவாதிகளின் கூற்றை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இருபது வருடகாலம் ஆயுதம் ஏந்தி தமிழ் இனத்திற்காக விடுதலைப் போராட்டம் நடத்திக்

எமக்கு புரியவில்லை.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்வதற்கு சிலர் கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள், அந் நாட்டுடன் ஒப்பந்தம் செய்வது இலகுவான காரியம் அல்ல, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் .அமெரிக்கா போன்ற நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொண்டாலும். இந்தப்பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு தூண்டுகோலாக இருப்பவர்களே இதற்கு எதிராக நாட்டில் எதிர்ப்பு போராட்டங்களை நடத்துவார்கள். மேற்கூறிய நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டால் எமது நாட்டின் இறைமைக்குப் பாதகத்தை உண்டு பண்ணும். நாட்டை காட்டி கொடுத்து விட்டார்கள் என்று நிச்சயமாக இவர்கள் கூறுவார்கள்.

விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று கூறும் அரசியல் வாதிகளுக்கு அடிப்படை அரசியல் காரணம் ஒன்று உண்டு. அதாவது பேரினவாதம் நாட்டில் இருக்கும் வரை விடுதலைப்புலிகளின் அரசியல் நடவடிக்கை களும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அதில் எந்த மாற்றங்களும் இராது.

இதனை உணராத ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமய கட்சியும் இனவாதத்தை நாட்டில் விதைப்பதால் புலிகளின் யுத்த நடவடிக்கைகள் வலுவடையும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் அவர்களுடன் யுத்தம் செய்து வெல்ல முடியாது .

சிங்களவர்களைப்பற்றி விசமப் பிரச்சாரங்களை இங்குள்ள வெளிநாட்டு நிறுவனங்களும், வெளிநாட்டு அரசியல் வாதிகளும் மற்றும் புத்தக வெளியீட்டு ஆசிரியர்களும்



நடத்தாது அரசாங்கம் விடுதலைப்புலி களுடன் அரசியலில் இணைந்து நாட்டில் நல்ல காரியங்களை செய்யலாம்: செய் வதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம் - மேலும் சமாதானப்பேச்சு வார்த்தை முன்னரைவிடவலுவடையும். விடுதலைப்

வெளிநாடுகளில். பிழையான கருத்துக்களை வெளியிடுகிறார்கள் என ஜே.வி.பி. யினரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியினரும் குறைகூறுகின்றனர். ஆனால் இங்குள்ள சிங்கள நாட்டுப்பற்றாளர்களும் , நாட்டுப்பற்றாளர் இயக்கமும் நாட்டில் புரியும் செயல்களைப்பற்றி

# பேரினவாதம் நாட்டில் இருக்கும் வரை

# புலிகளின் நடவடிக்கைகளில் மாற்றமிராது

உடன்பாடுகளையும் வைத்திருக்க கூடாது. அப்படி அவர்களுடன் அரசியல் தொடர்பு களை வைக்க வேண்டுமானால் முதலாவ தாக யுத்தம் செய்து அவர்களை தோல்வி யுறச் செய்தல்வேண்டும் இராண்டாவது தமிழீழக் கோரிக்கையை கைவிடும்வரை அவர்களுடன் எந்தஅரசியல் உடன் பாடுகளையும் பேச்சு வார்த்தை களையும் ஏற்பாடுத்தலாகாது. மூன்றாவது, விடுதலைப் புலிகளுடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அரசு விரும்பினால் வெளி நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளக்கூடாது. இதுவே ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் முன்வைத்துள்ள கோரிக்கைகளாகும். இவற்றை கதிர்காமரும் மறைமுகமாக ஆதரிக்கின்றார் என்பது சமீபத்திய அவரின் பேட்டிகளின்மூலம் காணக்கூடியதாக உள்ளது.

இந்த மூன்று கோரிக்கைகளும் இலங்கை இனப்பிரச்சினைகளில் பாரதூரமான விளைவு களை உண்டு பண்ணாது என்பதே எனது கருத்தாகும் அரசியல் பலம் இழந்த, இல்லை யேல் நாட்டில் பலமிழந்த ஒரு எதிர்கட்சி யினருக்கே இக் கோரிக்கையைச் சமர்பிக்க வேண்டும் . இவை யாவும் காலம் கடந்த செயல்பாடுகள். இந் நாட்டு மக்கள் இவற்றை கேட்டுக் கேட்டு அவர்களுக்கு காதுகளும் புளித்துப் போய் விட்டது. இவற்றை இந் நாட்டு மக்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வங்குரோத்து அடைந்த அரசியல் வாதிகளாகவே இவர்களை இப்பொழுது கணித்துள்ளார்கள்.

இருபது வருடகாலம் யுத்தம் செய்து விடுதலைப்புலிகளை வெல்ல

கொண்டிருக்கும் ஒரு விடுதலை இயக்கத்திடம் ஆயுதங்களை கீழே வையுங்கள் என்று கூறினால் இருபது வருட போராட்டத்தினால் எந்தப்பலனும் அவர்களுக்கு கிடைக்கப் போவதில்லை. மற்றும் சிங்கள பேரினவாதி களின் முன் அவர்களால் ஆயுதங்களை கீழே வைக்க மாட்டார்கள். எந்த ஒருவிடுதலை இயக்கமும் இதனைச் செய்ய மாட்டாது. என்றைக்காவது ஒருநாளைக்கு இவர்கள் ஆயுதங்களை கீழே வைக்கும் காலம் வரும். அதாவது இலங்கை அரசாங்கத்துடன் சமதானப் பேச்சுவார்த்தை முற்றாக நடத்தி இறுதியில் இவர்களின் கோரிக்கைகளை அரசுஏற்று ஒரு நிரந்தர சமாதான ஒப்பந்தத்தைச்செய்து கொண்டாலே தவிர அதுவரைக்கும் இவர்களை அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியாது. இதை முதலில் ஜே.வி.பியினர் தெரிந்து வைத்துக்கொள்வது நாட்டுக்கு மிகவும் நல்லது.

முன்னைய சனாதிபதி ஜே.ஆர். ஜய வர்த்தனா, லலித் அத்துலத் முதலி, அனுருத்த ரத்வத்த, ரட்ணசிறி விக்கிரநாயக்க போன்ற வர்களும் இக்கோரிக்கையை விட்டார்கள். அதனால் எந்தப் பலன்களும் ஏற்படவில்லை..

வடகிழக்கில் சுனாமியினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படை யில் உதவிகளை செய்வதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக சிங்கள பேரினவாத அரசியல்வாதிகள் ஆட்சி செய்யும் இந்த நாட்டில் எதற்காக இவர்கள் வெளி நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங் களை செய்து கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறார் கள் என்பது

புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நெருக்கமான அரசியல் உறவுகள் ஏற்படும் இதனால் இவர்கள் ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்திற்கு வருவதற்கு

அவதானித்து எனது இந்திய நண்பர் ஒருவர் கூறுவதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன். .அதாவதுசிங்கள தேசப்பற் றாளர்.இயக்கமும், ஜே.வி.பியும் சிங்களவர்கள்



இடமுண்டு. அதைவிட்டு விடுதலைப்புலி களுடன் எந்த ஒப்பந்தத்தங்களும் செய்ய வேண்டாம் என கூறும் பேரினவாதிகளின் குழந்தைத் தனமான அரசியல் நடவடிக்கை களை எப்படி வர்ணிப்பதென்பது எனக்கு தெரியாது. இவர்களின் எதிர்ப்பு கோசங்கள் யாவும் காற்றில் பறக்கும் தூசுகளுக்கு சமன் இவற்றை அரசாங்கத்தின் கொள்கைகளாகப் பிரகடனப்படுத்துவதற்கு சிலர் முயற்சிக் கின்றனர்.இது நாட்டுக்கோ மக்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படுத்தாது. இனவாதம் மேலும் வலுவடையும்.

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம்

தமிழர் களுக்கு எதிராக செயல்படும் குரோத மனப்பான்மை உடைய வர்கள் , இனவாதிகள்

ராவய சிங்கள வார இதழில்
பேராசிரியர் ஜயதேவ உயன்கொட
மொழியாக்கம் அ.சக்திவேல்

குறுகிய அரசியல்நோக் கம்கொண்டவர்கள் என்பதை இவர்களின் அரசியல் நடவடிக்கை இன்று உலகத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளது என்று கூறி உள்ளார்.


# புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் பிரதான வீதி இன்னும்... ஏன்...? இப்படி?

**வன்னிமண்ணின்** முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதான போக்குவரவு வீதி ஒன்றின் சீர்கேட்டு நிலை பற்றி அடிக்கடி செய்தி ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுவருவதனையடுத்து அவ்வீதியின் முக்கியத்துவம் பற்றியும் அவ்வீதியின் தற்போதையநிலைபற்றியும் நேரடியாக அறிந்துகொள்ளும் பொருட்டு அவ் வீதியியை நோக்கிச்சென்றோம்.

புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து வவுனியாமற்றும் தென்பகுதிக்குசென்றுவரும் பல்லாயிரக்கணக்கான மக்களின் போக்குவரவின் ஒரு அங்கமாக இருக்கும்புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியின் பெரும்பகுதி கவனிப்பாரற்றுகிடக்கும்பரிதாப நிலையை நாம் காணக்கூடியதாக இருந்தது.

இவ் வீதிபற்றி,வீதியில் நேரடியாகபயன் பெறுகின்ற,அவ்வீதியுடன் தொடர்புபட்டுபணிபுரிகின்ற சிலரைசந்தித்து அவர்களின் கருத்தூடாக அவ் வீதியின் நிலைபற்றியறிய எத்தனித்தோம்.

“ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 16 தடவைகளுக்கு மேல் பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து புளியங்குளம் பகுதிக்கு பேருந்துகளும் சிற்றூர்திகளும் சென்று வருகின்றன. ஆயிரக்கணக்கா னபயணிகள் சென்று வருகி ன்றனர். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இவ் வீதி நீண்ட காலமாக புனரமைக் கப்படாது இருப்பது ஏன் என எமக்குத்


நடராஜா கடம்பரூபன் நேரக்கணிப்பாளர்


தெரியவில்லை முன்னர் முக்கால் மணிநேரத்தில் கடந்த இப்பாதையை கடக்க இப்போது சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன.

பயணிகளுடன் பேருந்துகள் இவ்வீதியால் செல்கின்றபோது இடைநடுவில் பழுதடைந்து நின்று விடும் சந்தர்ப்பங்கள்அதிகம். இதனால் அடுத்து செல்கின்ற எமது பேருந்தே அந்தப்பயணிகளையும் நெருக்கி ஏற்றிச்செல்ல வேண்டிய பரிதாபநிலை காணப்படுகிறது. இதனால் பயணிகள் குறிப்பிட்ட இடத்திற்கு குறித்த நேரத்திற்கு சென்றடைய முடியாதிருக்கிறது. இந்த வீதி இன்னமும் திருத்தப்படாதது குறித்து பயணிகளும் பேருந்து ,சிற்றூர்தி உரிமையாளர்களும் விசனம் தெரிவிப்பதை எம்மால் கேட்டுகக்கூடியதாய் இருக்கிறது என்றார் புதுக்குடியிருப்புபேருந்து தரிப்பு நிலையத்தில் நேரக்கணிப்பாளராய் கடமைபுரியும் நடராஜாகடம்பரூபன்.

“நான்கிழமையில் மூன்று தடவைகள் இவ் வீதியால் பயணிகளை ஏற்றிச் சென்று வருகின்றேன். இந்த வீதியால் பயணிக்கின்ற போது புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டு சுட்டான் செல்லும் வரை சிரமப்படுகின்றோம். அத்தோடு, குறுகிய தூரப் பணத்திற்கு அதிக நேரம் எடுக்குது. இதனால், பயணிகளை விரைவாய் கொண்டு போய் சேர்க்கமுடியாமல் இருக்கின்றது. மிக முக்கியமாக எமது வாகனங்கள் அடிக்கடி பழுதடைகிறன. அடிக்கடி வில்லுத்தகடுகள் மாற்றவேண்டி இருக்கு. ஏனைய பாகங்களும் விரைவில் பழுதடைந்து விடுகின்றன. எமது உடல்


கேதீஸ்வரன் சிற்றூர்தி உரிமையாளர்

நிலையும் பாதிக்கப்படுகின்றது. வாகனத்துக்கான எரிபொருளும் அதிகமாய் தேவைப்படுகின்றது. விரும்பியோ விரும்பாமலோ இப் பாதையைத் தான் பயன்படுத்த வேண்டியதாய் இருக்கிறதால் பயணிகளும் வேண்டாவெறுப்பா எமது சிற்றூர்திகளில் பயணிக்கின்றனர். இப்படிப்பட்ட வீதியின் நிலைமை அறிந்தும் சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை திருத்த நடவடிக்கை எடுக்காதது குறித்து நாம்வேதனையடைகிறோம். என்றார் புதுக்குடியிருப்பிலிருந்து புளியங்குளம் பகுதிக்கு சிற்றூர்திகளில் பயணிகளை கொண்டு செல்லும் கேதீஸ்வரன் எனும்சிற்றூர்தி உரிமையாளர்.


ஜெக்சன் பிரயாணி

“நாங்கள்இந்த வீதியை கடந்த நான்கு வருட காலமாக பயன்படுத்தி வருகிறோம், யுத்தகாலத்தில் இருந்ததைவிட இப்ப இந்த வீதிமிகவும் மோசமடைந்துள்ளது. இங்கிருந்து புளியங்குளம் செல்லும் பயணத்தில் குறிப்பிட்ட இந்த வீதியை கடப்பது மிகச் சிரமமாய் இருக்குது. வயோதிபர்கள், நோயாளிகள் மிகவும் வேதனையுடன் பயணிப்பதை காணக்கூடியதாய் உள்ளது. இப் படிப்பட்ட நிலையை அறிந்தும் சம்பந்தப் பட்டவர்கள் இவ்வீதி குறித்து அக்கறை காட்டாதது கவலைக் குரியது” என்றார் மாத்தளன் பகுதியிலிருந்து புளியங்குளம் பயணிக்கும் ஜெக்சன் எனும் பிரயாணி.

இப்படியாக பல தரப்பட்டவர்களினாலும் இவ் வீதியைப் பற்றிய கருத்துக்களையறிந்து கொண்டு நேரடியாகவே அவ்வீதியை பார்ப்பதற்கு சிறிதுதூரம் புறப்பட்டு சென்று கொண்டிருந்த எமக்கு வாகனங்கள் ஆடியசைந்து மிகவும் சிரமப்பட்டுவருவதை காணக்கூடியதாக இருந்தது. வீதிகளிற்கான வரன் முறைகளை மீறி குன்றும் குழியுமாய்கிடந்த அந்த வீதியால் கல் ஏற்றி வந்து கொண்டிருந்த உழவு இயந்திரத்தை மறித்து அதை செலுத்தி வந்தவரிடம் இவ்வீதி பற்றி வினவினோம்.

“இதையாரிட்டை சொல்கிறது தம்பி யாரும் இத திரும்பி பார்க்கிறதா தெரியவில்லை.நான் இப்ப கெருடமடுப்பகுதியிலிருந்து கல் ஏற்றிக் கொண்டு வாறன். சுமார் எட்டுக்கிலோமீற்றர்தான் இப்ப வந்திருக்கிறன். ஆனா ஒரு மணி நேரம் எடுத்திருக்கு


கேதுசிகாமணி உழவுஇயந்திர உரிமையாளர்.

இந்த வீதி இப்படி கிடக்கிறதால் வாகனத்துக்கும் கூடாது. எங்கட உடல்நிலைக்கும் கூடாது. 700 ரூபா உளைச்சா 500 ரூபாசெலவாகுது. சில நேரம் பெரிசா ஏதாவது உடைச்சிட்டா பெரிய நட்டமாத்தான் இருக்கு என்றார் கோம்பாவில் பகுதியை சேர்ந்த கேது சிகாமணி எனும் உழவு இயந்திர உரிமையளாளர்.

இப்படிப்பட்ட மக்களின் மனக்குறைகளையும் போக்குவரத்துச் சிரமங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செவிமடுத்து இவ் வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுப்பார்களா? மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

ப.சுஸ்யந்தன்

# தேசிய விவகாரத்தில் அநாவசியத் தலையீடு பிரச்சினைகள் உருவாகவே வழியமைக்கும்!

## -பிரதம நீதியரசர் அபிப்பிராயம்

(கொழும்பு)

தேசிய விவகாரத்தில் அநாவசியமாக தலையிட்டு பிரச்சினைகளை உருவாக்க உயர் நீதிமன்றம் முற்படாது என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

சுனாமி பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளிட்ட கருத்திலேயே இவ்வாறு கூறினார்.'

சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் சுனாமி நிவாரண உதவிகளை விநியோகிப்பதற்கு சீரான வழிமுறையொன்று அவசியமாகும். இந்த விவகாரம் உணர்ச்சிபூர்வமானதும் சட்டரீதியானதுமாகும்.

உயர் நீதிமன்றம் தேசிய விவகாரங்களில் அநாவசியமாக தலையிட்டு பிரச்சினைகளை உருவாக்க மாட்டாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் பொதுக் கட்டமைப்பு சட்டமுரணானது என்றும் இதை இரத்துச்செய்து இது நடைமுறைப்படுத்தப்படுவதை நிறுத்த பணிப்புரை விடுக்குமாறு கோரி ஜே.வி.பிஉயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்குமீதான விசாரணை நேற்றுமுன்தினம்எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில்பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்திற்கு இடைக்கால தடைஉத்தரவு வழங்குவதா,? இல்லையா? என்பதுகுறித்து நளை உயர் நீதிமன்றம் தீர்மானிக்கவுள்ளது. இதேவேளை சுனாமி பொதுக் கட்டமைப்பு அமுலாக்கத்தை தாமதிக்குமாறு கோரி ஜாதிக ஹெல உறுமய தாக்கல் செய்த மனு மீது விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் உத்தேசித்துள்ளது.

# அப்புத்தளையில் பாரஊர்தி விபத்து ஆறுபேர் பலி; பன்னிரெண்டுபேர் காயம்!

பதுளை மாவட்டத்திலுள்ள அப்புத்தளையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பாரஊர்தியொன்று அப்புத்தளை பெரகலகந்தயில் 700அடி பள்ளத்தாக்கொன்றில் விழுந்ததில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர். காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அப்புத்தளை, பதுளை, தியத்தலாவை வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த வர்கள் மரண வீடொன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பும் போதே அவர்கள் பயணம் செய்த பாரஊர்தி விபத்திற்குள்ளாகியுள்ளது.


நாச்சிக்குடா கடற்கரையில் அமைந்துள்ள மீனவர் வாடிகள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதனையே படத்தில் காண் கிறீர்கள்.
படம்:- அ.லோகீசன்.

# மின்சார சபையை நிறுவனமயமாக்க அமைச்சரவை அங்கீகரித்தால் போராட்டம்!

## மின்சார சபை ஊழியர் தொழிற்சங்கம் அறிவிப்பு

மின்சார சபையை நிறுவன மயமாக்கும் திட்டத்தை அமைச்சரவை அங்கீகரிக்குமானால் தாம் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மின்சார சபை ஊழியர்களின் தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது. மின்சார சபையை மீளமைக்கும் திட்டம் தொடர்பில் எரிசக்தித் துறை அமைச்சினால் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில் தொழிற்சங்க பிரதிநிதிகள், மின்சாரசபையின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் அங்கம் வகித்தனர். இந்த நிலையில் குறிப்பிட்ட குழு நேற்றுமுன்தினம் கூடி தாம் தயாரித்த அறிக்கைக்கு கையொப்பம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது மின்சாரசபையின் பொறியியல்துறை தொழிற்சங்க பிரதிநிதி மாத்திரம் அதில் கையொப்பமிட்டார்.எனினும் ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கைச்சாத்திட மறுத்து விட்டனர்.

இதேவேளை இந்த அறிக்கை அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கையளிக்கப்பட்டு அது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுமானால் தாம் போராட்டங்களை நடத்தப் போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

# 80 மில். நிதி மோசடி விவகாரத்தில் பிரதமர்

# பாராளுமன்றத்தைத் திசைதிருப்ப முயற்சி

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண நிதி 80 மில்லியன் ரூபா தனியார் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டமை தொடர்பாக எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விக்கு அளித்த பதில்மூலம் பிரதமர் மகிந்தராஜபக்ஷ பாராளுமன்றத்தைத் திசைதிருப்ப முற்பட்டுள்ளார் என ஐ.தே. கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியைப்பெற்றே ஆழிப்பேரலை நிவாரணமாக பிரதமர் நிதியத்திற்கு கிடைத்த பணத்தை "ஹெல்ப்பிங் ஹம்பாந்தோட்ட" எனும் தனியார் கணக்கிற்கு மாற்றியதாக கடந்த ஐந்தாம் திகதி பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும் கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி பிரதமர் நிதியத்திலிருந்து தனியார் கணக்கிற்கு பணத்தை மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதியைக் கோரி அவர் அமைச்சரவை அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை அறிவிப்புப்பத்திரம் ஒன்றையே சமர்ப்பித்துள்ளார்.

எனினும் அந்த அறிவிப்பு பத்திரத்திலும் எந்தவொரு இடத்திலும் கிடைக்கப்பெற்ற நிதி ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை எனும் தனியார் கணக்கிற்கு மாற்றப்படவுள்ளதாகக் குறிபிடப்படவில்லை. அத்துடன் பிரதமர் நிதியத்தில் எவ்வளவு பணம் உள்ளது. அதில் எவ்வளவு பணம் சனாதிபதி நிதியத்திற்கு மாற்றப் படுகிறது என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எவ்வாறாயினும் ராஜகிரியவிலுள்ள தனியார் வங்கியொன்றில் ஹெல்ப்பிங் அம்பாந்தோட்ட எனும் இந்தத்தனியார் கணக்கு சனவரி மாதம் 26 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதாவது குறித்த அமைச்சரவை அறிவிப்பிற்கு முன்னரே இந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கு அடுத்து இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிப்பு பத்திரத்தில் இது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதன் மூலம் பிரதமர் பாராளுமன்றத்தைப் பிழையாக திசைதிருப்பியுள்ளார். பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஒருவர் இவ்வாறு பாராளுமன்றத்தின் கவனத்தை திசை திருப்பியிருப்பதனால் அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருவதாக அறிவித்துள்ளது.

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டுகள்
பதின்நான்கு ஓடி
மறைந்ததென்ன?
ஆறாத்துயரில்
நாமிங்கே!
தனிமையில்
தவித்திருந்த-நீ
சந்தித்தாயோ
சுனாமியில் வந்து
சேர்ந்த
உன் உறவுகளை

குடும்பத்தினர்
உடுத்துறை வடக்கு,
தாளையடி

**லெப்.மாக்கிறெட்**
**(சிற்றம்பலம் சாந்தி)**

| ஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 17.02.1971 | 14.07.1991 |

(6348)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



தமிழீழ மண் காக்க விரைந்து
புலிப்படை தன்னில் இணைந்து
யாழ். மண்ணை ஆக்கிரமிக்க முன்னேறிய
நடவடிக்கையை முறியடித்த வெற்றிகரப்
புலிப்பாய்ச்சல் தன்னில்
வீரகாவியமான எங்கள் செல்வமே-இன்றுடன்
நீ எம்மை விட்டுப் பிரிந்து ஈர் ஐந்து
வருடங்களாகிவிட்டதய்யா,
இன்று நடந்தது போலிருக்கின்றது.
எத்தனை தசாப்தங்களானாலும்
நாம் உன்னை மறவோம்
உன் கனவு நனவாகும் நாள்
வெகு தொலைவில் இல்லையடா

என்றும் உன் நினைவுடன்
சித்தப்பா குடும்பத்தினர்

**வீரவேங்கை மன்னன்**
லோகநாதன் கோகுலன் /கவாஸ்கர்
யா/பரியோவான் கல்லூரி மாணவன்
[உயர்தர வகுப்பு]

இந்நாளில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் அனைவரையும் நினைவு கூருகின்றோம்

| தாயின் மடியில் | தாயகமண்ணின் மடியில் |
|---|---|
| 27.05.1978 | 14.07.1995 |

நெத்தலியாறு,
விசுவமடு.

(6354)

## நீங்காத நினைவில் பதின்நான்கு ஆண்டுகள்

அந்நியர் அழிப்பு:-14.07.1991



இ.ஜெனகன்
ஆண்டவன் படைப்பு:25.03.1983



இ.ஜெயந்தினி
ஆண்டவன் படைப்பு:21.10.1981

காலங்கள் மறைந்தாலும்
எம் கவலைகள் மறையாது
மறைந்ததோ ஆண்டு பதின்நான்கு
மறையாமல் நிற்பதோ உங்கள்
நினைவலைகள் புன்முறுவல் பூத்த
உங்கள் திருமுகங்கள்
வாஞ்சையுடன் வாரிஅணைக்கும்
உங்கள் கரங்கள்
மனம் நோகா இதம் தரும் உங்கள்
அன்பு வார்த்தைகள் மறைந்தது ஏன்

நீங்காத நினைவாக நிற்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



இ.திவாகரன்
ஆண்டவன் படைப்பு:-09.09.1986



இ.மாலினி
ஆண்டவன் படைப்பு:26.02.1979

முகவரி:- இராசேந்திரம்
வெற்றிலைக்கேணி

உங்கள் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,சகோதரர்கள்

(6355)

## Advertisement for Contractors or Teams of workers for the construction of two buildings in Mallavi Hospital

MEDECINS DU MONDE

Actually working on the rehabilitation of Mallavi Hospital, MDM, French Non Governmental Organization, is looking for motivated and qualified workers (like contractors or team of massons, labors, carpenters, electricians and plombers---) to build one men's ward and one emergency ward.

The construction shall begin around the 1st of August.

We need 6 massons, 6 carpenters with their labours, 3 electricians and 3 plombers.

If you are interested, please come and meet us on Saturday morning 8. 30, the 16th of july in our office in Mallavi,

Regards,
MDM Team.

(6401)

## Project Co-ordinator

MEDECINS DU MONDE

**To support preparatory tasks and implementation of the programme (Rehabilitation of Mallavi Hospital)**

**Skills:**

1. Drafting, support planning and formulation of the project pro posals and budget. Preparation of work plans, timeframes and site planning.
2. monitoring programme activities and ensure the timely submis sion
3. Preparation of estimates for new works. Preparation of tender documents and evaluation of tenders.
4. Management of the construction process, participate in pur chasing of raw materials, labour rates, equipment, stock man agement.
5. Project management: implementation of the programme and follow up the activities.
6. Communication and negotiating with Government Departments to ensure the smooth flow of operations.

**Knowledge:**

1. 5 years minimum experience in management of Building Con struction
2. Ability to write and speak in English and Tamil essential.
3. Good communicator with strong personality.
4. Willingness to live in the Vanni.
5. Good computer knowledge would be an asset.

If you are interested, please come on monday morning 18th of july in our office in Mallavi, Mallavi Team.

(5950)

உலக தரத்திற்கு நிகராக

ஜேர்மன் நாட்டு தொழில் நுட்ப இயந்திரம்மூலம்

1 லீற்றர் 2.00

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

புற ஊதா கதிர்மூலம்
கிருமிகள் அழிக்கப்பட்டது

எப்போதும்
கிளிநொச்சியில்
பெற்றுக்கொள்ளலாம்

இயக்கச்சி சந்தியில் உள்ள எமது குடிநீர் சுத்திகரிப்பு
நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:-
குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்
இயக்கச்சிச் சந்தி
இயக்கச்சி.

MWB Construction
NGO complex
(TRO Head Office)
Jaffna Road,
Kilinochchi.

நீர்தாங்கிமூலம் உங்கள் இடங்களுக்கு நேரில் கொண்டுவந்து தரப்படும்

(சி-12328)


# பாரதிய ஜனதாத் தலைவருக்கு ஆர்.எஸ்.எஸ். காலக்கெடு விதிப்பு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக்கட்சித்தலைவர் அத்வானி பதவியில் இருந்து பத்து தினங்களுக்குள் விலகவேண்டும் என்று ஆர். எஸ்.எஸ் தலைவர்கள் அத்வானியை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

பாகிஸ்தான் சென்றபோது முகமது அலி ஜின்னாவை பாராட்டிப் பேசியதற்காக அத்வானிக்கு ஆர்.எஸ்.எஸ், விஸ்வஇந்துப் பரிசத் தலைவர்கள் கண்டனம் தெரி வித்து வருகின்றன. இதனால் பா.ஜ.வுக்கும் இந்துத்துவ அமைப்புக்களுக்கும் இடையே தொடர்ந்து கருத்து வேறுபாடு நிலவி வருகின்றது.

இந்நிலையில் அத்வானியை ஆர்.எஸ்.எஸ் தலை வர்கள் நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்துப் பேசினர்.இச்சந்திப்பின் போது பாஜ.க. தலைவர் பதவியில் இருந்து அத்வானி விலகியே தீரவேண்டும் என ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் வற்புறுத்தியுள்ளனர். சென்னையில் இன்னும் பத்து தினங்கள் நடைறெவுள்ள பா.ஜ.க தேசிய நிர்வாகக் குழுக்கூட்டத்திற்கு முன் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் காலக்கெடு விதித் துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பா.ஜ.க மூத்த தலைவர்கள் ஆர். எஸ்.எஸ். அலுவலகத்திற்குச் சென்றுஅதன் தலைவர்களுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளனர்.

## 14 ஆம் ஆண்டு நினைவினில்...



மனதினில் நின்றுலவும்
எங்களின் உறவே
மறப்போமா நாமுனை?
நாளிலும் பொழுதிலும்

குடும்பத்தினர்
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

லெப்.கேணல் குட்டி
(இராசு செல்வேந்திரன்)
(கெருடாவில் சாவகச்சேரி)

(சி.6325)

தாயின் மடியில்:- 28.05.1967 தாயக மண்ணில்:-14.07.1991

# மௌவல் வேளாண் வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது

# MOUVAL AGRO POWER (PVT) LTD

## பணிநிலை வெற்றிடம்

மௌவல் வேளாண் வலு (தனியார்), வரையறுக்கப்பட்டது. நிறுவனத்தினால் பின்வரும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிநிலை :- கணக்காளர் பயிலுநர்

தகைமை :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிக/முகாமைத்துவப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை :-ஆகக் கூடியது 32 வருடங்கள்.

பால் :-ஆண்/பெண்

ஊதியம் :-7000 + 2000

குறிப்பு :- உணவு, தங்குமிடவசதிகள்செய்து தரப்படும்.


மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுய விளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரட்ணாஸ் மேல்மாடி, ஏ9சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு 2005.07.20 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சன்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

முகாமைத்துவப் பணிப்பாளர்,
மௌவல் வேளாண் வலு (தனியார்) வ-து
Reg No :N (Pvs) 39914

(சி.12325)

## எம் வீட்டில் பூத்த மலர் வாடி ஐந்தாம் ஆண்டுநினைவு



மண்ணில் 1974 . 05 . 23

காவியமானது 2000 . 04 . 14

மாவீரச்செல்வம்
வீரவேங்கை அன்பு
அந்தோனிப்பிள்ளை சகாயபாமா

காலையில் பூத்து மாலையில் வாடி
மறைவது போல் எம்மோடு வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஐந்து
வருடங்களாகின்றது எம்மைப்பற்றி-
எதுவித ஜனனமும் இல்லாமல்
உறங்குகின்றாயே ஏனோ- உன்
நினைப்பினிலே எம் கண்கள் உறங்க..
வில்லையம்மா- எம் கண்களை உறங்க...
வைப்பதற்கேனும் ஒரு முறையேனும்
வந்து பாராயோ- உன் நினைவுடன்
வாழும் அன்பு மறவாது.

உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

நி.மு:-59கென்னடி வீதி, நாவாந்துறை,யாழ்ப்பாணம்

த.மு:-சிமாட் தையலகம்,அரச அதிபர் விடுதி முன்பாக, கிளிநொச்சி, (திருநகர்)

(சி.12324)

# வடக்கு கிழக்கு உதைபந்தாட்ட சம்மேளனம் அங்குரார்ப்பணம்

வடக்கு கிழக்கின் எட்டு மாவட்ட உதைபந்தாட்ட சங்கங்களின் நிர்வாகத்தினர் கலந்து கொண்ட கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.பாப்பா தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், தமிழீழ விளையாட்டுத்துறை தலைவர் பத்மநாதன்,தமிழீழ விளையாட்டுத்துறை செயலாளர் அன்ரன் அன்பழகன் உட்பட மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் கலந்து கொண்டனர். அத்துடன் இக்கலந்துரையாடலில் எட்டு மாவட்டங்களையும் இணைத்து வடக்கு - கிழக்கு உதைபந்தாட்ட சம்மேளனம் அமைக்கப்பட்டது.

தலைவராக அன்ரன்தங்கேஸ்வரன், (மன்னார் லீக்)செயலாளராக கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, (யாழ்.லீக்)உபதலைவராக குணரட்ணம், உபசெயலாளராக வரதராஜன், (பருத்தித்துறை லீக்)பொருளாளராக செ.ஸ்கந்தகுமார் (வவுனியா லீக்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக,

ஏ.எம்.இப்ராகிம் (அம்பாறை லீக்) எம்.எவ். பாருக் (மட்டக்களப்பு லீக்) கே.யோகரட்ணம் (திருகோணமலை லீக்) தி.தர்மசீலன் (முல்லைத்தீவு லீக்) கே.புவனேந்திரராசா (கிளிநொச்சி லீக்) எவ்சான்டஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.




மக்கள் வங்கியின் சிசுஉதான சாதனையாளர் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவர்களில் முதலாம் இடத்தைப் பெற்ற அக்கராயன் மா.வி. மாணவியான சீவரத்தினம் தாரணி



சிசு உதான சாதனையாளருக்கான நிகழ்வில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி பவித்திரா மாணிக்கவாசகம் நாடகம்,கட்டுரை மற்றும் நடனம் போன்ற சாதனையாளருக்கான விருதை சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனிடம் பெற்றுக்கொண்டார்.

# முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டி மேற்கிந்தியத்தீவு 271 ஓட்டம் குவிப்பு



சிறிலங்கா - மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையில் நேற்று எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் வெளிச்சம் போதாமையால் நிறுத்தப்படும்போது முதலில் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்தியத்தீவு ஆறு விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களை பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவு முதலில் துடுப்பெடுத்தாட இணங்கியது. இதன்படி 195 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தபோதும் அணித்தலைவர் சந்தர்போலுடன் இணைந்த பாங்ஸ் ஆடுகளத்தில் நிலைத்து நிற்க விக்கெட் வீழ்த்தும் சிறிலங்காவின் முயற்சி பயனற்றுப்போனது.

இறுதியில் 82 ஓவர்கள் நிறைவில் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது ஆட்டமிழக்காது சந்தர்போல் 69 ஓட்டங்களையும், பாங்ஸ் 30 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இவர்களை விட மோட்டன் 43, ரம்டின் 56 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் மாலிங்க, விஜயக்கோன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், சமிந்தவாஸ் முரளிதரன் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.


## நட்சத்திரவீரர் லாறாவுக்கு அணியைப்பற்றி எந்தக் கவலையுமில்லை

**- தரன் கங்கா**

லாறாவுக்கு மேற்கிந்தியத்தீவு அணியைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. தன்னைப் பற்றியே அவர் நினைக்கக் கூடியவர். அவர் அணியின் வெற்றிக்காக விளையாடுவது இல்லை. மற்ற வீரர்களையும் அவர் ஊக்கப் படுத்த மாட்டார். ஆதரவாக இருக்கவும் மாட்டார். அவருக்கும் மற்ற வீரர்களுக்கும் சரியான உறவு கிடையாது என்கிறார் மேற்கிந்தியத்தீவு வீரர் தரன் கங்கா.

ஏற்கனவே மேற்கிந்தியத்தீவு முன்னாள் விக்கெட் காப்பாளர் ரெய்ட்லி ஜேக்கப் "லாறா ஒரு சுயநலவாதி. அவருக்கு அணியைப்பற்றிக் கவலை கிடையாது" என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 25 ஆண்டுகால நடுவர் பணியில் மே.தீவு - அவுஸ். அணிகளே சிறந்தது



- டேவிட் ஷெப்பேட்

நவீன தொழில் நுட்பங்கள் கிரிக்கெட்டில் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்திருப்பதைமறுக்க முடியாது. நமது தவறுகளை தொலைக்காட்சிக்கமரா காட்டிக் கொடுத்து விடுகிறது. அதே சமயம், நமது திறமையை, தனித்தன்மைகளை தொலைக்காட்சி நிரூபிக்கவும் செய்கிறது. கிரிக்கெட்டைப் பொறுத்தவரை, எதிர்காலத்தில் தொலைக்காட்சித் தொழில்நுட்பம் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் என்கிறார். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக ஓய்வுபெற்ற நடுவர் டேவிட் ஷெப்பேட். எனது 25 ஆண்டுகால நடுவர் பணியில் மிகச் சிறந்த அணிகள் என்று நான் கருதுவது 1980 களில் இருந்த மேற்கிந்தியத்தீவு மற்றும் தற்போதைய அவுஸ்திரேலிய அணிகள்தான். இவ்விரு அணிகளுக்கு இடையே இப்போது போட்டி வைத்தோமேயானால்... அவுஸ்திரேலியாதான் வெல்லும் காரணம்- ஷேன்வோர்ன் நான் பார்த்த வரையில் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்

கிரிக்கெட்டில் எனக்கும் சில பாணிஉண்டு குறிப்பாக ஓட்டம் 111 அல்லது.. இந்த வரிசைகளில் இருக்கும் போது ஒரு காலை உயர்த்தி இலேசாகத் தாவுவது எனது வழக்கம். சிறு வயதில் நான் கிரிக்கெட் விளையாடும் போது ஆரம்பித்தது இந்தப்பழக்கம் இப்படிச் செய்வதன் மூலம் விக்கெட் விழாமல் தடுக்கலாம். என்ற எண்ணம். இதுபோல இன்னும் சில மூடநம்பிக்கைகளும் எனக்கு இருந்தன. "மத்தியஸ்தம் செய்த காலத்தில்... நீங்கள் இரசித்த மிகச்சிறந்த ஆட்டம் எது?" என்ற கேள்விக்கு பதிலளித்த டேவிட் ஷெப்பேட் "அவுஸ்திரேலிய அணியின் இந்தியப் பயணம் ஒன்று எனக்கு மறக்கவே மறக்காது அந்த டெஸ்ட்போட்டி ஷேன்வோர்ன் - சச்சின் டெண்டுல்கர் இடையிலான தனிப்பட்ட மோதலாக [illegible]கப்பட்டது.

# கில்கிறிஸ்ட் அதிரடிச்சதம் கோப்பையை வென்றது அவுஸ்.




மூன்றாவது போட்டியில் வீசிய பந்துகளை எல்லாம் விளாசித்தள்ளிய கில்கிறிஸ்ட் சதம் அடிக்க அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தை எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடரை 2-1 என்ற கணக்கில் வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா களத்தடுப்பைத் தேர்வு செய்தது. பிரட்லீ வேகத்தில் ரெஸ்கொதிக் ஓட்டமெதுவும் பெறாமலும் வோர்ன் 15 ஓட்டத்திலும் ஆட்டமிழந்தார். கொலிங்வூடும் (9) தாக்குப்பிடிக்க தவற, இங்கிலாந்து ஆறு விக்கெட் இழப்புக்கு 93 ஓட்டமெடுத்து திணறியது.

இதற்கு பின் பீட்டர்சன் மாற்று வீரராக வந்த விக்ரம் சோலங்கி இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் ஏழாவது விக்கெட்டுக்கு 93ஓட்டம் சேர்த்தனர். பீட்டர்சன் 74 ஓட்டம் எடுத்தார். இரண்டு சிக்சர்,எட்டு பவுண்டரி விளாசினார். கடைசிக் கட்டத்தில் கைல்ஸ் கைகொடுக்க, இங்கிலாந்து அணி 50 ஓவரில் ஏழு விக்கெட் இழப்புக்கு 228 ஓட்டம் எடுத்தது. சோலங்கி 53, கைல்ஸ் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

229 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்திரேலியா கில்கிறிஸ்டின் அதிரடி ஆட்டதுணையுடன் 34.5 ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ்ட் ஆட்டமிழக்காது 121 ஓட்டங்களைக் குவித்தார். ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார்.

# இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்திய அணியில் பெரிய மாற்றம் வரும்



- சப்பல்

இன்னும் இரண்டு ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணியில் பெரிய அளவில் மாற்றங்கள் வரலாம், சிலபேருக்கு காயங்கள் ஏற்படுகிறது. வீரர்கள் மாறலாம்.

அந்தநேரத்தில் இவர்களைக் கொண்டு தான் அந்த இடத்தை பூர்த்திசெய்ய முடியும். அப்போது இந்திய அணியே புதிய மாற்றத்தைப் பெற்றிருக்கும் என்கிறார் புதிய பயிற்சியாளர் சப்பல்.

கிரிக்கெட் அணிக்கு சர்வதேச பயிற்சியாளர் தேவையா? இல்லையா? என்பது பற்றி கருத்துச் சொல்லவேண்டுமானால் இப்போதைய நிலைமைக்கு பயிற்சியாளர் தேவை என்பதே எனது கருத்து. அதாவது இப்போதைய நிலையில் தலைவருக்கு பணிகள் அதிகம். அவருக்கு உதவி அளிக்கும் வகையில் பயிற்சியாளர் ஒருவர் நிச்சயம் வேண்டும்.

மைதானத்தில் நுழைந்து விட்டால் அணியைக் கவனித்துக் கொள்ளும்வேலை முழுவதும் தலைவருக்கு சென்றுவிடுகிறது. ஆனால் வெளியே அணியை தயார்ப்படுத்தி அனுப்பும் வேலையை பயிற்சியாளர் தான் செய்யவேண்டும்.


வீரர்களைத் தேர்வுசெய்யும் விடயத்தில் நான் தலையிடாவிட்டாலும் தேர்வுக் குழுவிடம் சில ஆலோசனைகளைச் சொல்வேன். எந்தெந்த அடிப்படையில் வீரர்களைத் தேர்வு செய்தால் நன்றாக இருக்கும் என்று என் கருத்தைச் சொல்வேன். வீரர்களுக்கும், தேர்வு குழுவுக்கும் நல்ல உறவு இருக்க வேண்டும்.

சீனியர் வீரர்களாக இருந்தாலும் சரி, ஜுனியர் வீரர்களாக இருந்தாலும்சரி, இருவருமே கஷ்டப்பட்டு தங்கள் முழுத்திறமையையும் வெளிகொண்டு வரவேண்டும்.

சீனியர் வீரர்களின் திறமை சில நேரங்களில் மங்கிப்போவதுண்டு. இதற்கு மன அழுத்தம்தான் காரணமாக இருக்கும். அதைச் சரிப்படுத்தி விட்டால் மீண்டும் திறமையாக விளையாட முடியும். அந்தப்பணியை நாங்கள் செய்வோம். எவ்வளவு பயிற்சி அளித்தும் மீண்டும் திறமை வராவிட்டால் அவர்கள் அணியில் நீடிப்பது கஷ்டமானதுதான்.

எந்த வீரராக இருந்தாலும் சரி அவருக்குள் இருக்கும் திறமையை பயிற்சியாளரால் வெளிகொண்டு வர முடியும். திறமை இல்லாத ஒருவரை மந்திரம், தந்திரம் செய்து திறமையான வீரராக உருவாக்கிவிட முடியாது. இவ்வாறு கிரேக்சப்பல் கூறினார்.





## சிந்தனைக்கு

நாங்கள் ஒரு உன்னத இலட்சியத் திற்காகப் போராடுகிறோம் அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை, கிளிநொச்சி. 14-07-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## மாரியின் பின் மீண்டும்....!

வன்னிப் பிரதேசத்தில் வீதிகள் மிக மோசமான நிலையினால் – பெரும்பாலான வீதிகள் மக்களின் போக்குவரத்திற்கு ஏற்றவையாக இல்லை. இதுஅனைவருக்கும் தெரிந்ததொன்றே. ஆயினும் சில வீதிகள் முழு அளவில் இல்லாதுவிடினும் பகுதி அளவிலாயினும் செப்பனிடப்பட்டும் வருகின்றன. ஆயினும் செப்பனிடப்படும் வீதிகள் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்கும் என்பது பொதுவானதும் நியாய பூர்வமானதுமான கேள்விகளாகவே உள்ளன.

செப்பனிடப்படும் சில வீதிகளில் பெரும்பாலானவை பாணின் மீது மாஜரின் தடவுவது போன்று ஒரு சிறியபடையாக வீதியின் மீது கிரவல் போடப்படுகின்றது. இதனைக் கிரவல் தடவப்படுகின்றது என்று கூறினாலும் கூடப் பொருத்தப்பாடானதாகவே இருக்கும். இவ் வீதிகள் மூன்று மாதங்கள் கூடியது ஆறு மாதங்கள் தாக்குப் பிடிக்குமா? என்பதும் சாந்தேகமே.

இது ஒரு புறம் இருக்க– ஓரிரு வீதிகள் பகுதியாகவாயினும் தார் ஊற்றப்பட்டு செப்பனிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. ஆனால் அவ் வீதிகள் கூட எவ்வளவு காலத்திற்குச் சீரான போக்குவரத்திற்கு ஏற்றவையாக இருக்கும் என்ற ஐயப்பாடும் கூடவே எழுகிறது. அதாவது அடுத்து வரும் மாரி காலத்தின் பின்பும் அவை சீரான போக்குவரத்திற்கு ஏற்றவையாக இருக்குமா? என்ற கேள்வி இருக்கவே செய்கின்றது.

ஏனெனில் சீர்செய்யப்படும்வீதிகள் உரியமுறையில் சீர்செய்யப்படுவதாகத் தெரியவில்லை. அதாவது வீதிகளைச் செப்பனிடப் பயன்படுத்தப்படும் பொருட்களில் இருந்து வீதி அமைப்பு முறைகள் வரை வீதிகள் ஒரு மாரி காலத்தைத் தாக்குப் பிடிக்கத் தக்கவையாக இல்லை.

வன்னிப் பகுதியில் செப்பனிடப்படும் அமைக்கப்படும் வீதிகள், சீர்கேடடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன.இதில் கற்கள், சீமெந்து, இறுக்கமான தார் போன்றவை பயன்படுத்தப்படாமல் – அதாவது தரமான மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படாமல் கிரவல், நீர்த்தன்மை பொருந்திய தார் போன்றவை பயன்படுத்தப்படுவதினால் விரைவிலேயே வீதிகள் சேதமாகி வருகின்றன.

இது ஒரு புறம் இருக்க வீதி செப்பனிடப்படுகையில் கவனிக்கப்படாத அன்றி கருத்தில் எடுக்கப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள் பலவும் வீதிகள் விரைவாவே சேதமடைவதற்குக் காரணமாகின்றன. இந்த வகையில் வன்னிப் பிரதேசத்தின் பௌதீகச்சூழல் முக்கியமான பங்கை வகிக்கின்றது எனலாம்.

பொதுவில் வீதி அமைப்பு அன்றி புனரமைப்பிற்கு முன்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தரைத்தோற்றம், வடிகால், மண்வகை, மழைவீழ்ச்சி மாதிரி என்பன கருத்தில் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. கருத்தில் எடுக்கப்பட்டிருப்பினும் கூட அவைஅமைக்கப்படும் அன்றிப் புனரமைக்கப்படும் வீதிகளைப் பாதுகாப்பவையாக இல்லை.

வன்னிப் பிரதேசத்தில் –குறிப்பாக கிளிநொச்சி மாவட்டம்– அதிலும் குறிப்பாக கிளிநொச்சி நகரையும்அதன் சூழவுள்ள பகுதிகளையும் எடுத்துக்கொண்டால் இம் மாவட்டத்தின் ஊடாகச்செல்லும் பிரதான வீதியான ஏ–9 வீதி வடக்குத் தெற்காகச் செல்கையில் ஏனைய முக்கிய வீதிகளில் பெரும்பாலானவை கிழக்கு– மேற்காகவோ; மேற்குக் கிழக்காகவோ செல்கின்றன.

ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கையான பௌதீகவடிகால் அமைப்பானது பொதுவில் வடக்கு– தெற்குப் போக்குடையதாகவே உள்ளது. இந்நிலையில்பெரும்பாலான குறுக்கு வீதிகள் வடிகாலுக்கு குறுக்கானவையாகவே அமைக்கப்படுகின்றன. இந்நிலையானது வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்வதற்கான சூழ்நிலையையே ஏற்படுத்துபவையாகவுள்ளன. இதேசமயம் வடக்கு– தெற்காகவுள்ள வீதிகளில் பெரும்பாலானவை வெள்ளவாய்க்கால் போன்றவையாகவே உள்ளன.

அடுத்ததாக வன்னிப்பிரதேசத்தின் மண்வகை நீரை உட்புகவிடும் தன்மை கொண்டவையாக இல்லை. ஆகையினால் பெறப்படும் மழைவீழ்ச்சியில் பெரும்பாலானவை மேற்பரப்புஊடாக வழிந்தோடியே கடலை அடைகின்றன. இந்நிலையில் நீர் வழிந்தோடுவதற்கான வடிகால்கள்அமைக்கப்படாதுபோனால் வீதிகள் அள்ளுண்டுபோவது தவிர்க்க முடியாதவையாகவே இருக்கும்.

மேலும் இப்பிரதேசத்தின் மழைவீழ்ச்சி மாதிரியானது குறுகிய நேரத்தில் கனமழை என்பதாகவே உள்ளது. அதாவது வருட மழைவீழ்ச்சியில் பெரும்பகுதி சில நாட்கள்அன்றி ஓரிரு வாரங்களில்கிடைக்கப் பெறுகின்றது. ஆகையினால் மழையின்போது பெரும் வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு ஆகையால் வீதி அமைத்தல், புனரமைத்தல் என்பனவற்றின்போது அவை கவனத்திற் கொள்ளப்படாது போனால் வீதிகள் ஒவ்வொரு மாரியின் பின்பும் புனரமைக்கப்பட வேண்டியவையாகவே இருக்கும்.

அதாவது வீதி செப்பனிடப்படும்போது வடிகால்கள் சீராக்கப்படுவதோடு வீதிகளின் மேலால் வெள்ளம் பாயாது தடுக்க போதிய குழாய்களும் அமைக்கப்படுதல் வேண்டும். தற்பொழுது குழாய்கள் முற்றாகப் போடப்படவில்லை என்பதல்ல. போடப்படுபவை போதியதாக இல்லை என்பதே சுட்டிக்காட்டப்படும் விடயமாகும்.

# கடல்கோள் அனர்த்தப் பகுதிகளில்

# மீள் குடியேற அரசு அனுமதிக்கும்!

### கரையோரப் பாதுகாப்புத்திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மீள் குடியேறுவதற்கு அனுமதியளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, கரையோரப் பாதுகாப்பு திணைக் களத்தின் பணிப்பாளர் ஆர்.ஏ.டீ.பி. சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் 100 மீற்றர் தடை வலயச் சட்டத்தை அரசாங்கம் முழுமையாக அகற்றப்போவதில் லையெனத் தெரிவித்துள்ள அவர், மூன்று மீற்றரிலும் உயரமான பகுதிகளிலே கட்டட மீள் நிர்மாணப் பணிகளுக்கு அனுமதியளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதா கவும் கூறியுள்ளார்.

உயரமான பகுதிகளில் வீடமைப் பதற்கும், உல்லாச விடுதிகளை அமைப்பதற்குமான, நிவாரண உதவி களை வழங்குமாறு நகர அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் கரையோரப் பாதுகாப்பு வலயத்தின் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் வாழ்வாதார நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர் கரையோரப் பகுதிகளை அண்டி வாழ்ந்த மீனவருடைய நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இந்தத் தீர்மானத்தை அரசாங்கம் மேற் கொண்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற் கொள்ளப்பட வேண்டிய திருத்தப் பணிகள் குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ள ஆர்.ஏ.டீ.பி. சமரநாயக்க, சனாதிபதியின் செயலாளர் இந்தக் குழுவிற்கு தலைமை வகிப்பதாகவும் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தக் குழுவில் நில அளவை யாளர் நாயகம், நகர அபிவிருத்தி அதிகாரசபை முதல்வர் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக் களத்தின் பணிப்பாளர் ஆகியோர் அங்கம்வகிக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

## பொதுக்கட்டமைப்பை ஆதரித்து பேரணி

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தக் கோரியும், இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மலையக இளைஞர் முன்னணி எதிர்வரும் 17ஆம் திகதி பேரணியொன்றை நடாத்தவுள்ளதாக அறிவித் துள்ளது. ஹட்டன் நகரில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளதாக மலையக இளைஞர் முன்னணி அறிவித்துள்ளது. அத்துடன் இது தொடர்பான சுவரொட்டிப் பிரச்சார நடவடிக்கைகளிலும் இந்த முன்னணியினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியலமைப்பைப் பாதிக்காத வகையில் பீட்டர் ஹரோல்ட் நடந்துகொள்ள வேண்டும்

### ——ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலர் கூறுகின்றார்

(கொழும்பு)

உலக வங்கியின் இலங்கைக் கான வதிவிடப்பிரதிநிதி பீட்டர் ஹரோல்ட் இலங்கையின் அரசியல மைப்பை பாதிக்காத வகையில் நடந்துக்கொள்ள வேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச, பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தமது கட்சி உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விசாரணையின்போது உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி கடிதம் ஒன்றை தாக்கல் செய்திருந்ததாகத் தெரிவித்தார்.

அதில் பொதுக்கட்டமைப்புக்கான நிதிகளை உலக வங்கியே கையாளும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் அந்த நிதிக்கையாள் கையின் அங்கீகாரத்தை இலங்கை யின் அமைச்சரவை கொண்டிருக்கும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்த விமல் வீரவன்ச, இலங்கையின் நிதிகையாள்கையின் உரிமையை பாராளுமன்றமே கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

எனவே உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி இந்த நடைமுறைக்கு மாறான வகையில் தமது கருத்தை கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை செய்துக்கொண்டாலும், பாராளுமன்றத்தில் அங்கீகரிக் கப்பட்டுள்ள சட்டமூலத்தின் அடிப்படையில் அந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகியுள்ளது.

பயங்கரவாதத்திற்கு நிதியளிப் பதற்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள சட்டமூலம் இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதிபோய் சேர்வதை தடுக்கும் வலுவைக் கொண்டுள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என அமைச்சர்களும் பிரதிஅமைச்சர்களும் தெரிவித்து வந்தனர். எனினும் தற்சமயம் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித் துள்ளதாக விமல் வீரவன்ச கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் சட்டங்களை மீறி செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்திய அவர், சனாதிபதித் தேர்தலை வலியுறுத்தி அது பேரணியை நடத்தியமை சட்டத்தை மீறும் செயலாகும்.

இந்த நிலையில் தேர்தல் ஆணையாளரே தேர்தல் ஒன்றை அழைக்கும் உரிமையைக் கொண்டுள் ளார்.

ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகினாலும் அதனைப் பொருட்படுத் தாமல் சனாதிபதி பொதுக்கட்ட மைப்பில் கைச்சாத்திட்டார்.

ரணில் விக்கிரமசிங்க தமது அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக் கமாட்டார் என்ற உறுதிமொழியை வெளிநாட்டு தூதரகங்களின் ஊடாக பெற்றுக்கொண்டதன் பின்னரே சனாதிபதி குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் துணிந்தார்.

மத்தியில் சிறுபான்மை அரசாங்க மானாலும், மாகாண சபைகளில் சிறுபான்மையானாலும் ரணில் விக்கிரமசிங்கவின் உறுதிமொழியின் அடிப்படையிலேயே சனாதிபதி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி அதனைத் தற்சமயம் நடைமுறைப் படுத்தவும் முயற்சிக்கிறார்.

அரசியல் அமைப்பின்படி தேர்தல் நடத்தப்படும் காலத்தில் தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடத்துவார்.

இதனை சொக்ஸி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்கனவே தெரிவித்திருப்பார்.

இந்த நிலையில் 2006 ஆம் ஆண்டுதான் சனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையா ளர் தெரிவிப்பாராக இருந்தால் ரணில் விக்கிரமசிங்கவினால் அரசாங்கம் கவிழாமல் மலர்தூவிக்கொண்டிருக்க மாத்திரமே முடியும் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பில் பாரபட்சம் காட்டினால் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

### – அமைச்சர் ஏ.ஏச்.எம் பௌசி எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்மைப்பில் முஸ்லிம் மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டால் அதற்கு எதிராகத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் ஏ.ஏச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

பி.பி.சி சந்தேசியவுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு பகுதியில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதை விடுதலைப்புலிகள் தற்போது முதன்முறையாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நிவாரண சபையிலுள்ள அரசாங்க பிரதிநிதிகள் முஸ்லிம்களை பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இயலாத் தன்மையற்ற அரசியல்வாதியாவார் இவர் தனது சுயநலத்திற்காக முஸ்லிம்களை பலிக்கடாவாக்குகின்றார்.

அத்துடன் எதிர்கால சமாதனப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படும் என்று நான் நம்புகின்றேன். நிவாரண சபையில் அரசியல் கட்சியைச் சாராத சுதந்திரமான முஸ்லிம் பிரதிநிதிகளை பிராந்திய மற்றும் மாவட்ட அளவில் நியமிக்க வேண்டும் என்றார் அவர்.

# முல்லைக் கடற்பரப்பில் மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல்

## - அண்மை நாட்களாக அடாவடித்தனங்கள் அதிகரிப்பு

(முல்லை)

முல்லை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் அண்மை நாட்களாக மீனவர்களை தாக்கி வருவதுடன் மண்பிடி நடவடிக்கைகளுக்கும் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்திடம் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை தாக்கியபோதும் மயிரிழையில் தப்பி மீனவர்கள் கரை திரும்பினர்.

நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற முல்லைத்தீவு மீனவர்கள் மீது கண்மூடித்தனமாக சிறிலங்கா கடற்படை தாக்கியதால் மீனவர்கள் தமது வலைகளைக் கடலில் விட்டு விட்டு உயிர் தப்பினார்கள.

கடந்த சில நாட்களாக கடலில் சிறிலங்காப்படையினரால் இவ்வாறான அடாவடித்தனமான செயற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் இதற்கு சரியான நடவடிக்கை எடுக்கும்படியும் முல்லைத்தீவு மீனவர் கள் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவு சங்க சமாச தலைவர் அ.மரியராசாவிடம் முறையிட்டுள்ளனர். (20)

-வல்வைப் பாலத்தில்-

# மூன்று உந்துருளிகள் விபத்து; மூவர் படுகாயமடைந்தனர்

சமவேளையில் மூன்று உந்துருளிகள் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமுற்றநிலையில் மந்திகை ஆதாரவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் வடமராட்சி வல்வைப் பாலத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது. ப.யேசுநாயகம்(வயது55) மாதகல், மரியாம்பிள்ளை கனகம்மா(வயது65) கோப்பாய் மத்தி கோப்பாய் மற்றும் இளம் பெண்ணொருவரும் படுகாயமடைந்தனர். படுகாயங்களுக்குள்ளான மூவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(கா)

### கவிதை நூல் அறிமுகம்

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும" கவிதைத்தொகுப்பு அறிமுகவிழா எழுகலை இலக்கியப்பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கிளி பண்பாட்டு மண்டபத்தில் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் தலைமையில் இவ் அறிமுக நிகழ்வு நடைபெறவுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்க அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நேற்று



கல்லாறு கிராமத்தில் நாட்டி வைக்கப்பட்டது.

இலங்கை புனர்வாழ்வு அமைச்சும், சேவாலங்கா நிறுவனமும் இணைந்து சுண்டிக்குளப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 100 குடும்பங்களுக்கு ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான 520 சதுர அடி பரப்பைக் கொண்ட நிரந்தர வீடுகளை அமைப்பதற்கே நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது. இதில் ஒவ்வொரு வீட்டுக்கும் இலங்கை புனர்வாழ்வு அமைச்சு நான்கு இலட்சத்து ஐம்பதாயிரமும் சேவாலங்கா நிறுவனத் தினர் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரமும் வழங்குகின்றனர்.

நேற்று மதியம் 12 மணிக்கு கல்லாறு மீள்குடியேற்றத்திட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரின் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் அடிக் கல்லினை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேத நாயகம் நாட்டி வைத்தார்.

சுண்டிக்குளம் பகுதியை அண்டிய பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 249 குடும்பங்களில் 48 குடும்பங்களுக்கு உலக வங்கியின் ஹபிடாச் நிறுவனம் ஏற்கனவே வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அத்தோடு ஏனைய 101 குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் வீடுகளை அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி நிகழ்வில் சேவாலங்கா நிறுவன வதிவிடப் பிரதிநிதி பிலிப், சேவாலங்கா மன்ற சுனாமித் திட்டப் பணிப்பாளர் தமிழ் ஆகியோரும் அடிக் கல்லினை நாட்டினர். தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகள், தமிழீழ நிர்வாக சேவை பிரதிநிதிகள், கிளிநொச்சி அரச அதிபர் செயலக பிரதிநிதிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச.லோ)

## திருமலையில்...

இரண்டாவது தாக்குதல் கிண்ணியா தம்பலகாமம் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது இடம்பெற்றுள்ளது. தாக்குதல் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சிறிலங்கா படைச்சிப்பாய் காயமடைந்துள்ளார்.

மூன்றாவது தாக்குதல் திருமலை காந்திநகர் ஊடாகச் செல்லும் கண்டி வீதியிலுள்ள காவலரணை மையப்படுத்தி நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல் காலை 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்துள்ளனர்.

## குடாநாட்டில்...

பகல் வேளையில் பலாலியை அண்டிய மக்கள் குடியிருப்பு பகுதிகளில் வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக முன்னரங்க நிலைப் பகுதியை அண்டிய சூனியப்பிரதேசங்களிலும், விடுவிக்கப்பட்ட விவசாய நிலப்பகுதிகளையும் மையமாகக் கொண்டே இவ் ரோந்து இடம் பெறுகிறது.

எனினும் வெளியாட்களது நடமாட்டம் தொடர்பாக விமானப்படை தகவல்களை வழங்குமிடத்து அவ்விடத்திற்கு விரைந்து வரும் படையினர் அவர்களை விசாரணைக்குள்ளாக்குவதாக மக்கள் கூறுகின்றனர். (27)

## சனாதிபதி...

இந்த உயர்பாதுகாப்பு வலயச் சட்டதிட்டங்களுக்குள் உள்ளடக் கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பங்குபரிவர்த்தனை நிலையம் இரத்தினக்கல் மற்றும் தங்க நகை ஆபரண அதிகாரசபை முதலீட்டு அதிகாரசபை, சிறிலங்கன் வானூர்தி தலைமையகம், உள்ளிட்ட பல முக்கியமான மக்கள் தொடர்பு மையங்களைக் கொண்ட உலகவர்த்தகமையம், மத்தியவங்கி, இலங்கை வங்கி தலைமையகம், செலிங்கோ, மற்றும் கலதாரி, ஹில்ட்டன், கொழும்பு இன்றகொன்றனன்றல் சொகுசு விடுதிகளும் அடங்கும்.

எனவே இந்த இடங்களில் பணியாற்றும் பணியாட்கள் விருந்தினர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் அடிப்படையில் நடத்தப்படுவார்கள். இந்த உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்கள் அல்லது தலைமையாளர்கள் தமது கட்டடங்களில் உள்ள தளபாடங்கள், பணியாட்கள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்பட வேண்டும். அத்துடன் மாற்றங்களும் 24 மணித்தியாலத்துள் அறிவிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் பகுதிக்குள் பொலிசார் தேடுதல்களை நடத்தவோ சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்யவோ பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை முன் அனுமதி இன்றி இந்த உயர்பாதுகாப்பு வலயத்துள் கனரக வாகனங்கள் உள்நுழைவதும் தடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் இந்த சட்டதிட்டங்களுக்கு உட்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## அரசின்...

தனியாக பேருந்துகளில் கொண்டு செல்லப்படவேண்டும் என்றும், அவ்வாறு செல்லும் போராளிகளுடன் படையினரும் ஒவ்வொரு பேருந்துகளில் செல்ல வேண்டும் என்றும் புலிகள் கேட்டிருந்தனர். அதனை ஏற்றுக்கொள்ளாத அரசாங்கம் பேருந்துகளில் கண்காணிப்புக் குழுவினர் செல்வர் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஒரு மாதத்தில் இவ்வாறான இரு பயணங்கள் நடைபெறவேண்டுமென புலிகள் கேட்டிருந்த போதும் மாதம் ஒரு பயணத்திற்கே அனுமதிக்கமுடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கான பதில் கடிதம் புலிகளால் கண்காணிப்புக்குழுவினூடாக அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப் படுமெனத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை புலிகள் விதித்த காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது.

## தமிழ்...

சந்திப்பின் பின்னர் இந்தத் தகவலை இளந்திரையன் வெளியிட்டார். முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்தச்சந்திப்பு பிற்பகல்இரண்டுமணிவரையில் நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய இளந்திரையன், இச் சந்திப்பில் இணங்கிக் கொண்டமைக்கு அமைய மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் நல்லுறவைப்பேணுவதற்காக அமைக்கப்படவுள்ள கட்டமைப்பில் முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப்புலிகள், மற்றும் நிர்வாக உயரதிகாரிகள் ஆகியோர் அங்கம் பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய மாவட்ட முஸ்லிம் சம்மேளனத்தின் பிரதித்தலைவர் வை. எம்.எம்.ஏ.காதர் காணி,குடியிருப்பு,நிலப்பிரச்சினை உட்பட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்தார்.

கடந்த காலங்களை விட இந்தச் சந்திப்பு சுமுகமாக இருந்தது. இந்த நிலையில் இரண்டு சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வை வளர்க்க இவ்வாறான சந்திப்புக்கள் தொடர்ந்தும் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சர்ச்சை...

போதும் பின்னர் அவர்கள் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அன்று இரவே மேற்படி சிலையும் அகற்றப்பட்டு இருப்பதாக அறிவிக்கப் படுகிறபோதும் இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எ.எம்.சி. அபேசிங்க பண்டாவிடம் கேட்டபோது மேற்படி சிலை அகற்றப்பட்டு இருப்பதாக தனக்கும் அறிவிக்கப்பட்டு இருப்பதாகவும் இன்று காலை தான் நேரடியாகச் சென்று பார்வையிட்டதன் பின்னரே இதனை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்த புத்தர்சிலை தொடர்பாக ஓமந்தைப் பிள்ளையார் கோவில் குருக்களினால வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று பதியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## கிழக்கில்...

அவர்களுக்கு இலக்காக எங்களை ஆக்கிக் கொள்ளாத விதத்தில் நின்று சிறிலங்கா இராணுவ கட்டுப் பாட்டுப் பகுதிகளில் உள்ள எங்களுடைய செயலகங்களில் அரசியல் பணிகளில் ஈடுபடவுள்ளோம்.

கடந்தவாரம் திருகோணமலையில் நடைபெற்ற தாக்குதலை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதா? அல்லது மட்டக்களப்பில் உள்ள நிலைமைகளை வைத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதா? எனக் கேட்ட போது,

இவைகள் மட்டுமல்ல அண்மைக் காலமாக சிறிலங்கா அரச படையினர் கடைப்பிடித்து வரும் போக்கு மற்றும் எங்களுடைய அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர்கள் கொடுத்திருக்கும் பதிலில் உள்ள பொறுப்புணர்ச்சி அற்ற தன்மை போன்றவை இவ்வாறான வழிகளிலே எங்களைச் சிந்திக்க வைத்துள்ளதே ஒழிய வேறொன்றுமில்லை என்றார்.

இது கிழக்கு மாகாணத்தில் சுனாமி நிவாரணப் பொதுககட்டமைப்பு அமையவுள்ள நிலையில் இந்த மாதிரியான மாற்று ஏற்பாடுகளை எடுப்பதானால் அதில் சிக்கல்களை ஏற்படுத்தாதா? எனக் கேட்டபோது :

சுனாமிக் கட்டமைப்பிற்கும், எங்களுடைய இந்த நிலைப்பாடுகளுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் கிடையாது. ஏனெனில் இது எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாங்கள் சில ஏற்பாடுகளை எங்களை இலக்காக்கிக் கொள்ளாதபடியான சில ஏற்பாடுகளைச் செய்திருக் கிறோமே தவிர எங்களுடைய பழைய ஏற்பாட்டில் வேறெந்த மாற்றங்களும் இல்லை என்றவர் இலக்காக்கிக் கொள்ளாதிருத்தல் என்பது எங்களை இலகுவில் தாக்கிக் கொள்ளாதபடி எதிரிகளுக்கு எங்களை இலக்காக்காதபடி சில நகர்வுகளை - எங்களுடைய தங்குமிடங்கள் சார்ந்த விடயங்களை வைத்துக் கொள்வதென்பதே பொருள் என்றார்.

உங்களுடைய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்று கூறுகிறீர்கள். ஆனால் மற்றைய தமிழ்க் குழுக்கள் தங்களுடைய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் சிறிலங்கா அரசிடம் முறையிட்டு வருகிறார்களே. இது குறித்து என்ன கூறுகிறீர்கள்? எனக் கேட்டபோது,

ஒப்பந்தத்தின்படி அவர்கள் இங்கிருக்கவேண்டிய தேவையில்லையே. பிறகு அவர்கள் இங்கே வந்து ஏன் தங்களை அச்சுறுத்தலுக்கு ஆட்படுத்திக் கொள்கிறார்கள் என்றார் இளந்திரையன்.

# சாவு அறிவித்தல்



## திரு சி.பத்மநாதன்

## (கிச்சி வாத்தியார்)

அளவெட்டி வடக்கு அளவெட்டியைச் சேர்ந்த திரு.சி. பத்மநாதன் (கிச்சிவாத்தியார்) ஆசிரியர் அவர்கள் 10.07.2005 அன்று காலமானார். இவர் அன்னைபூபதியின் அன்புக் கணவரும், ஈஸ்வரதேவி உமைபாலன், தேவகி, இரகுநாதன், நிமலன், பவானி, இரவீந்திரன், ஜங்கரன், தர்சினி ஆகியோரின் தந்தையும் ஆவார். யதுகுலன், யாதவன், ஆரதி,சயன், தரங்கினி, தேனின்பன், சகானா, மோசிகீரன், ரசிகரன், பாதுளன், தேனுயா, அத்மிதா, அற்மிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை (14.07.2005) இன்று காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தகவல்:-
ரகுமாஸ்ரர் .குடும்பம்.

(6356)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.